# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

**கோவை- 21.**

Enable | Enlighten | Enrich
KARPAGAM
ACADEMY OF HIGHER EDUCATION
(Deemed to be University)
(Established Under Section 3 of UGC Act, 1956 )

# கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

# தமிழ்த்துறை

(2019-2020)

**பகுதி – I, தமிழ்ப் பாடத்திட்டம்**

**இரண்டாம் பருவம்:19LAU201**

(முதலாமாண்டு இளநிலை **கலையியல்**
பட்ட வகுப்புகளுக்குரியது)

**(For I-UG Arts Degree Classes)**

# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

## தமிழ்த்துறை

## பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2019 - 2020)

### (இளநிலை கலையியல் பட்ட வகுப்புகளுக்குரியது)

### (For I-UG Arts Degree Classes)

---

**பாடத்திட்டப் பொதுநோக்கம்**

- கற்றல் வழி சிந்தனைத் திறனையும், கருத்து வெளிப்பாட்டுத் திறனையும், ஆய்வுநோக்கையும் மேம்படுத்துதல்.
- இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வின் நுட்பமான பகுதிகளை உணர்த்துதல்.
- மனித மனத்தினைப் பக்குவப்படுத்துதலில் இலக்கியம் தரும் பங்கினை உணர்த்துதல்.
- வளர்ந்து வரும் சமூகத்தில் அறஉணர்வு, பண்பாடு போன்றவை குறித்து அறிவூட்டல்.
- அரசுத் தேர்வுகளுக்கு மாணவர்களை ஆயத்தமாக்குதல்.

**பாடத்திட்டப் பயன் விளைவு**

- இந்திய குடியுரிமைப் பணி முதலான போட்டித் தேர்வுகளில், விருப்பப் பாடமாக இடம்பெறுகின்ற, 'தமிழ் இலக்கிய வரலாறு' குறித்த முழுமையான அறிமுகம் பெற்றிருத்தல்.
- கல்வெட்டியல், ஓலைச்சுவடியியல் மற்றும் தொல்லியல் சார்ந்த ஆவணத் தேடலுக்குரிய ஆய்வுமனப்பான்மையுடன், இலக்கியங்களை அணுகுதல்.
- தமிழின் வளர்ச்சித் துறையாகிய, 'அறிவியல் தமிழ்' ; 'இணைய தமிழ்' குறித்த பன்நோக்கு அணுகுமுறையிலான ஆய்வுச் சிந்தனை வளர்ச்சி பெற்றிருத்தல்.
- வேலைவாய்ப்புக்குரிய சுயதிறன் மேம்பாட்டுடன், படைப்பாக்கத்திறன் மேம்பாடும் பெற்றிருத்தல் .
- சமுதாய மற்றும் வாழ்வியல் மதிப்புகளைப் பேணுவதற்குக் கருவியாக இலக்கியங்களை நாடுகின்ற மனப்பான்மை வளர்ச்சி.

### தாள்கள் வரிசையும் தேர்வுச் செயல்திட்டமும்

### பகுதி-I தமிழ்

### இளநிலைப் பட்டவகுப்புகள்

| பருவம் | தாள் | கற்பிக்கும் நேரம்/வாரம் | தேர்வு மணிகள் | மதிப்பெண் அக/எழுத்து | மொத்தம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| இரண்டு | I | 6 | 3 | 40 / 60 | 100 | 6 |

# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

## தமிழ்த்துறை

## பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2019-2020)

**பகுதி – I, தமிழ்** **இரண்டாம் பருவம்** **19LAU201 :**

**இரண்டாம் தாள்** 6-H,6-C

**(இளநிலை கலையியல் பட்ட வகுப்புகளுக்குரியது)**
**(For I-UG Arts Degree Classes)**

---

### அலகு – I : பக்தி இலக்கியம் (10 மணிநேரம்)

சைவ, வைணவ இலக்கியங்கள் - தோற்றம் ,வளர்ச்சி, வரலாறு

1. **சைவம் - பெரியபுராணம் – இளையான்குடிமாற நாயனார் புராணம் (19 பாடல்கள்) .** (அம்பொன் நீடிய, கொண்டு வந்து, ஆளு நாயகர், செல்வம் மேவிய, மாரிக் காலத்து, ஈர மேனியை, நமக்கு முன்பிங்கு, செல்லல் நீங்க, மற்றம் மாற்றம், உள்ளம் அன்பு, காலினால் தடவி, வந்தபின் மனைவியாரும், முறித்தவை அடுப்பின், வழிவரும் இளைப்பினோடும், மனைவியார் கொழுநர், கணவனார் தம்மை, அழுந்திய இடருள், மாலயற் கரிய, அன்பனே அன்பர் பூசை)
2. **வைணவம் - பெரியாழ்வார் திருமொழி: 3-ஆம் பத்து - பத்தாம் திருமொழி** ‘நெறிந்தகருங்குழல் மடவாய்’ - சீதைக்கு அனுமன் தெரிவித்த அடையாளம்.(1-10).

### அலகு – II : சங்க இலக்கியம் : (22 மணிநேரம்)

சங்க இலக்கியங்கள் அறிமுகம்

**அ). எட்டுத்தொகை**

**நற்றிணை :**

1. நோ, இனி வாழிய நெஞ்சே-குறிஞ்சி – தலைவன் - 190
2. நின்ற சொல்லர் –குறிஞ்சி – தலைவி – 01

**குறுந்தொகை:**

1. நிலத்தினும் பெரிதே – குறிஞ்சி -தோழி - 3
2. கழனிமா அத்து - மருதம் – பரத்தை - 283

**ஐங்குறுநூறு:**

1. தாய் சாப் பிறக்கும் – தோழி – மருதம் - களவன் பத்து: 24

2. வாழ் ஆதன், வாழி - தோழி – மருதம் –தோழி கூற்றுப் பத்து: 01

**பதிற்றுப்பத்து : ஏழாம் பத்து**

1. எறிபிணம் இடறிய செம்மறுக் – 65
2. வாங்குஇரு மருப்பின் தீம்தொடை- 66

**பரிபாடல்:** பரிபாடல் திரட்டு- வையை:

விரிகதிர் மதியமொடு – வையை புனல் 11:1-15, வரையன புன்னகம்- நீர்ப் பூந்துறை 11:16-30, பாய் இரும் பனிக்கடல் – ஓங்கு விறல் சேஎய்! 1:01-54.

**கலித்தொகை :**

1. அகன்ஞாலம் விளக்கும்-நெய்தல் கலி –தலைவி- 119.
2. கருங்கோட்டு நறும்புன்னை - நெய்தல் கலி – தலைவி -123

**அகநானூறு :**

1. ஈன்றுபுறம் தந்த எம்மும் உள்ளாள் – பாலை - நற்றாய்-35

**புறநானூறு :**

1. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் -183
2. பல்சான்றீரே -பொதுவியல்-195

**ஆ). பத்துப்பாட்டு: குறிஞ்சிப்பாட்டு – அறத்தொடு நிற்றல்**

## அலகு - III : காப்பியம் (12 மணிநேரம்)

## அ) சிலப்பதிகாரம்:

**மங்கல வாழ்த்துப் பாடல்:** பொதியில் ஆயினும் – 'கோவலன் என்பான் மன்னோ' (14-38), 'நீல விதானத்து' – 'நோன்பு என்னை'(48-53).

**மனையறம் படுத்த காதை** : 'வார் ஒலி கூந்தலை' – 'சிறப்பின் கண்ணகி தனக்கு என்' (84-90)

**அரங்கேற்றுகாதை :** 'மாமலர் நெடுங்கண்' - 'அகம் மறந்து' (170-175).

**மதுரைக்காண்டம்** : கொலைக்களக் காதை : 'இருமுது குரவர்' - 'எழுந்தனன் யான்' (67-83), 'வினை விளை காலம்' - ' கொணர்க ஈங்கு என' (148-153).

**கட்டுரை காதை** : 'கடி பொழில்' - 'இல்சாபம் பட்டனிர்' (138-170).

**வழக்குரைக் காதை** : 'அல்லவை செய்தார்க்கு' - 'தோற்றான் உயிர்' (82-93).

**வஞ்சிக் காண்டம்** : நடுகல் காதை - 'மதுரை மூதூர்' - 'மன்னவர் ஏறு' (218-234)

**வாழ்த்துக் காதை** : 'என்னே இஃது' - 'தோன்றுமால்' (9)

**ஆ) மணிமேகலை: விழா வறைகாதை :** 'தேவரும் மக்களும்' - 'மருங்கு என்' (66-72).

**ஊரலர் உரைத்த காதை** : 'நாவல் ஓங்கிய' - 'உண்டு கொல்'(1-17), 'கற்றுத் துறைபோகிய' – 'தீத்தொழில் படாஅள்' (32-57).

**பாத்திரம் பெற்ற காதை** : 'போதி நீழல்' - 'நல் அறம் கண்டனை' (73-98).

**சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை** :

'வாழி எம்கோ' - 'அரசுஆள் வேந்துஎன்' (129-163).

## அலகு – IV : சிறுகதை (10 மணிநேரம்)

1. **மகாமசானம்-** புதுமைப்பித்தன்
2. **அப்பாவின் வேஷ்டி -** பிரபஞ்சன்
3. **அந்நியர்கள் -** *ஆர். சூடாமணி*
4. **இந்நாட்டுமன்னர்-** நாஞ்சில்நாடன்

## அலகு- V : மொழிப்பயிற்சி ( 6 மணிநேரம்)

படைப்பிலக்கியப் பயிற்சிகள் (கதை, கவிதை,கட்டுரை, உரைநடை எழுதுதல், நேர்காணல்)

மொழிபெயர்ப்பு

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

---

# KARPAGAM ACADEMY OF HIGHER EDUCATION

*(Deemed to be University Established Under Section 3 of UGC Act 1956)*

**Coimbatore – 641 021.**

## LECTURE PLAN DEPARTMENT OF TAMIL

STAFF NAME: Dr.B. UMARANI

SUBJECT NAME: TAMIL SUB.CODE:19LAU201

SEMESTER: II CLASS: I B.Com CA

| Month | Topics to be Covered | Lecture Duration Period | Support Material/Page Nos |
|---|---|---|---|
| நவம்பர் 2019 | பாடத்திட்டத்தின் இன்றியமையாமையும், பயன்பாட்டு நோக்கும் | 01 | |
| | பக்தி இலக்கியம் - சைவம் (பெரியபுராணம்) - அறிமுகம் | 01 | W : 1 |
| | இளையான்குடி மாறநாயனார் புராணம் | 02 | T1:09 |
| | சங்க இலக்கியம் – எட்டுத்தொகை - அறிமுகம் | 01 | T1:19 |
| | நற்றிணை | 02 | T1:19 |
| | காப்பியம் - அறிமுகம் | 01 | W : 2 |
| | சிலப்பதிகாரம் | 03 | T1:48 |
| | புறநானூறு | 01 | T1:33 |
| | சிறுகதை - அறிமுகம் | 01 | T1:61 |
| | புதுமைப்பித்தன் – மகாமசானம் | 02 | T1:61 |
| | திருப்புதல் | 01 | T1:34 |
| | **மொத்த மணிநேரம்** | 16 | |
| திசம்பர் 2019 | வைணவம் - அறிமுகம் | 01 | W : 1 |
| | பெரியாழ்வார் திருமொழி | 03 | T1:14 |
| | பதிற்றுப்பத்து | 02 | T1:23 |
| | கலித்தொகை | 02 | T1:29 |
| | அகநானூறு | 02 | T1:31 |
| | மணிமேகலை - அறிமுகம் | 01 | T1:55 |
| | விழா அறை காதை,ஊரலர் உரைத்த காதை | 02 | T1:56 |
| | பாத்திரம் பெற்றகாதை, சிறைக்கோட்டக் காதை | 02 | T1:57 |
| | அந்நியர்கள் - சிறுகதை | 02 | T1:81 |

| | | | |
|---|---|---|---|
| | மொழிப்பயிற்சி | 02 | |
| | திருப்புதல் | 01 | |
| | **மொத்த மணிநேரம்** | **20** | |
| **ஜனவரி** 2019 | குறுந்தொகை | 01 | T1:20 |
| | ஐங்குறுநூறு | 02 | T1:21 |
| | பரிபாடல் | 03 | T1:25 |
| | குறிஞ்சிப்பாட்டு | 05 | W : 1 |
| | அப்பாவின் வேஷ்டி - பிரபஞ்சன் | 02 | T1:70 |
| | இந்நாட்டு மன்னர் – நாஞ்சில் நாடன் | 02 | T1:99 |
| | மொழிப்பயிற்சி | 01 | T1:128 |
| | திருப்புதல் | 02 | |
| | **மொத்த மணிநேரம்** | **18** | |
| **பிப்ரவரி** 2019 | மொழிப்பயிற்சி | 03 | T1:128 |
| | திருப்புதல் | 03 | |
| | மொத்தமணி நேரம் | **06** | |
| | | | |
| | **மொத்த மணிநேரங்கள்** | **60** | |

**TEXT BOOK :** **கற்பகச்சோலை – தமிழ்ப் பாடநூல்**

**தமிழ்த்துறை வெளியீடு (2019-2020)**

கற்பகம் நிகர்நிலை பல்கலைக் கழகம் கோவை-21

References books : **பெரியபுராணம் –தொகுதி 1**

பன்னிரு திருமுறை ஆய்வு மையவெளியீடு

கற்பகம் நிகர்நிலை பல்கலைக் கழகம் கோவை-21.

**பாட்டும் தொகையும்**

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு மதுரை.

.**WEBSITES :**

**W1**: www.tvulibrary.org.in

**W2:** http://www.maduraitamilproject.com

## UNIT-I

## SYLLABUS

**பக்தி இலக்கியம் – சைவ, வைணவ இலக்கியங்கள் - தோற்றம் ,வளர்ச்சி, வரலாறு, சைவம் - பெரியபுராணம் – இளையான்குடிமாற நாயனார் புராணம், வைணவம் - பெரியாழ்வார் திருமொழி: 3-ஆம் பத்து - பத்தாம் திருமொழி**

1. **சைவம் - பெரியபுராணம் – இளையான்குடிமாற நாயனார் புராணம் (19 பாடல்கள்) .**
   (அம்பொன் நீடிய, கொண்டு வந்து, ஆளு நாயகர், செல்வம் மேவிய, மாரிக் காலத்து, ஈர மேனியை, நமக்கு முன்பிங்கு, செல்லல் நீங்க, மற்றம் மாற்றம், உள்ளம் அன்பு, காலினால் தடவி, வந்தபின் மனைவியாரும், முறித்தவை அடுப்பின், வழிவரும் இளைப்பினோடும், மனைவியார் கொழுநர், கணவனார் தம்மை, அழுந்திய இடருள், மாலயற் கரிய, அன்பனே அன்பர் பூசை)
2. **வைணவம் - பெரியாழ்வார் திருமொழி: 3-ஆம் பத்து - பத்தாம் திருமொழி**

   ‘நெறிந்தகருங்குழல் மடவாய்’ - சீதைக்கு அனுமன் தெரிவித்த அடையாளம்.(1-10).

## அலகு-1: பக்தி இலக்கியம்

## 1. சைவம்-பெரியபுராணம்-இளையான்குடி மாற நாயனார் புராணம்

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாவது திருமுறையாக அமைகின்றது. பெரியபுராணம் அறுபத்து நான்கு நாயன்மார்களின் வரலாற்றினைக் கூறும் நூலாகும். அந்நாயன்மார்களுள் ஒருவரான இளையான்குடி மாற நாயனாரின் வரலாற்றினைப் பின்வருமாறு காண்போம்.

**1. இளையான்குடியில் சிவபக்தர்**

மாற நாயனார் இளையான் குடி என்ற ஊரில், வேளாள மரபில் தோன்றியவராவார். அவர் பொன்னினால் வேயப்பட்ட மேற் கூரையினைக் கொண்ட தில்லைச் சிற்றம்பல மண்டபத்தில் நடனம் புரிகின்ற சிவபெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டவர். சிவப் பேரன்பிற்கும், சிவத் தொண்டிற்கும் தாம் அடிமை என்ற கொள்கையினராக வாழ்பவர்.

மாறனார் ஏர்த்தொழிலான விவசாயத்தின் மூலமாகத் தயாரித்த உணவு வகைகளையும், அவற்றின் மூலம் சம்பாதித்த பெருஞ் செல்வங்களையும் கொண்ட செல்வந்தர் ஆவார். அவர் கங்கையைத் தம் தலையில் தரித்திருக்கும் சிவபெருமானுடைய பக்தர்களாகிய, சிவனடியார்களிடத்தில் பேரன்பு கொண்ட மனம் உடையவர். இப்படிப் பெருஞ் செல்வமும் சிவப் பற்றும் கொண்டவராய் இவ்வுலகில் போற்றத்தக்க புகழுடன் வாழ்ந்துவந்தார்.

**2. நாயனாரின் விருந்தோம்பல் சிறப்பு**

ஆரத்தினையும் எலும்பினையும் அணிகலன்களாக அணிந்த ஈசனது அன்பர்கள் என்ற ஒரே தன்மையினராக தன் முன் வருபவர் யாவரேயாயினும், மாறனார் அவர்களைப் பயபக்தியுடன் இருகரம் கூப்பி வணங்கி அழைப்பார். அச்சிவனடியார்கள் மனம் குளிருமாறு அன்புடன் பேசி மகிழ்ந்த பிறகு அவர்களைத் தம் வீட்டினுள் அழைத்துச் செல்வார். அடியார் பாதங்களை நீரினால் சுத்தம் செய்து, உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி அருச்சனை செய்வார். அதன்பின் உண்ணல், தின்னல், பருகுதல், நக்குதல் என்றவிதம் அமையும் நான்கு வகை உணவுகளை, அறுசுவையுடன் அவர்களுக்கு அளித்து மனம் நிறைவடைவார்.

**3. இறைவனின் திருவிளையாடல்**

எல்லா உயிர்களையும் தமக்குள் அடக்கியாளும் ஆளுடை நாயகராகிய பரமனின் பக்தர்கள் நாள்தோறும் பெரும் எண்ணிக்கையில் கூடிவந்து மாறனாரின் வீட்டில் உணவுண்டு வந்தனர். அவ்வடியார்கள் மாறனார் மீது பேரன்பு கொண்டனர். பசித்தோர்க்கு உணவளித்த நற்பேற்றினால் மாறனாரின் செல்வ வளம் மேலும் மேலும் அதிகரித்து, அளகாபுரி நகரில் வாழும் செல்வத்திற்கு அதிபதியான குபேரனைப் போன்ற மிகுவளம் படைத்த வாழ்வினை அவர் அடைந்தார். இப்படிச் சீருடனும் சிறப்புடனும் இளையான்குடி மாற நாயனார் வாழ்து கொண்டிருக்கும் நாளில், இறைவனது திருவிளையாடல் நிகழ்ந்தது.

**4. வறுமையிலும் தொண்டை மறக்கவில்லை**

மாறனார் தம்மிடம் செல்வம் மிகுந்திருக்கும் வேளையில் மட்டுமின்றி, தரித்திரம் நிறைந்து வறுமையில் வாடும் பொழுதும் அடியார்களுக்கு உணவளிக்கும் பணியினைப் பேரன்புடன் தொடர்ந்து செய்வார் என்பதை ஈசன் உலகிற்கு உணர்த்த எண்ணினார். இதன் மூலம் மாறனாரின் புகழ் மென்மேலும் உயர்வடையும் என்றும் கருதினார். ஆகவே மாறனாரின் பெருஞ் செல்வம் மெல்ல மெல்லக் குறைந்து இறுதியில் அவர் மிகுவறுமை அடையுமாறு திருவிளையாடல் செய்தார்.

இப்படியாகத் தமது செல்வங்கள் குறைந்து சுருங்கிய போதிலும், மாறனார் தம் மனம் சுருங்காமல் தம்மிடம் உள்ள பொருட்களை விற்றும், கடன் வாங்கியும் அடியார்களுக்கு உணவளிக்கும் ஒப்பற்ற சேவையினைக் கொள்கைப் பற்றுடன் தொடர்ந்து செய்துவந்தார்.

**5. அடியவராக, இறைவனே வந்தார்**

விட்ணுவுக்கும் பிரமனுக்கும் இருந்த அகந்தைக் குணத்தை அழித்து அருளியவர் பரமன் ஆவார். அத்தகு சிவபெருமான் தன் மனைவியான உமாதேவியும், வாகனமான இடபமும் தன்னுடன் இன்றி சிவனடியார் வேடத்தில் தனி மனிதராக மாற நாயனார் வீட்டிற்கு வருகை தந்ததார். அப்படி அவர் வருகை தந்த காலம் மழைக்காலம் ஆகும். இரவு கடந்து நள்ளிரவும்(நடு ஜாமம்) ஆகியிருந்தது. மேலும் அத்தருவாயில் மாற நாயனார் மிகு வறுமையினை அடைந்திருந்தார். உண்ண உணவின்றிப் பசித் துயர் வாட்ட, உறக்கமும் வராத நிலையில் மாறனார் இருந்த பொழுது, பரமன் சிவனடியாராக அவர் வீட்டினை அடைந்தார். மாறனார் சிவனடியார்க்கு உணவளிக்கும் பெரும் பேராளர் ஆதலால் விருந்தினராக வந்தவரை இரு கரம் கூப்பி வணங்கி வரவேற்றார்.

**6. மாறனாரின் அன்புள்ளம்**

மழைக் காலத்தில் பயணித்துவந்த சிவனடியாரின் மேனியில் படிந்திருந்த ஈரத்தினைத் துடைத்து, அவர் ஓய்வெடுக்கத் தன் மனையில் ஓர் இடத்தினையும் கொடுத்தார். அதன் பின் அடியாருக்கு உணவளிக்க வேண்டும் என்ற ஆவலினால், தமது மனைவியை நோக்கி தவத்தினர் மிகு பசியுடன் உள்ளார். அவருக்கு உணவளிப்பதற்குரிய வழி யாது என வினவுகின்றார். மேலும் இங்கு நமக்கே உணவில்லை, ஆயினும் பர்வதராசனின் மகளாகிய பார்வதிக்குத் தம் உடலில் பாதியை அளித்த அர்த்தநாரீஸ்வரரின் அடியாருக்கு உணவளித்தல் அவசியமாகும் என்றும் கூறுகின்றார்.

அதற்கு அம்மையார் பதிலுரைப்பவராய், எனக்கு வழியொன்றும் தெரியவில்லை. இனி கடன் கொடுப்பதற்கு யாரும் இல்லை என்ற அளவிற்குப் பலரிடம் கடன் வாங்கிவிட்டோம். யாரிடமாவது சென்று உதவி கேட்கலாம் என்றால் நேரமும் நடு ஜாமம் ஆகிவிட்டது. வேண்டுமென்றால் இன்று காலை வயலிலே நாற்றுக்காக விதைத்த நெல் மணிகளை எடுத்துவந்தால் சிவனடியாருக்கு அரிசி உணவு செய்யலாம். இதைத் தவிர வேறு வழி எனக்குத் தெரியவில்லை என்று மனம் வருந்துகின்றார்.

**7. வயல்வெளிக்கு விரைவாகச் சென்றார்**

மனைவியார் கூறிய உபாயத்தைக் கேட்ட மாத்திரத்தில் ஏதோ பெருஞ் செல்வம் கூரையைப் பிரித்துக்கொண்டு கொட்டியது போல் மாறனார் மன மகிழ்ச்சி அடைகின்றார். உடனே நெல் மணிகளை வாரிக் கொண்டுவரக் கூடையுடன் வயலுக்குக் கிளம்புகின்றார். மாரிக் காலமாதலால் செல்லும் வழியெங்கும் பெரு மழை பெய்கின்றது. நிலவொளியும்கூட இன்றி இருள் அடர்ந்து காணப்படுகின்றது. உலக மக்கள் யாவரையும் அச்சத்திற்கு ஆட்படுத்தும் வகையில் வானம் இருண்டிருக்கின்றது. அந்த நடு ஜாமப் பொழுதில் கண் தெரியாமல் தமது கால்களால் நிலத்தைத் தடவிக்கொண்டு ஒரு நிதானத்தில், நாயனார் நீர் நிறைந்த வயலினை அடைகின்றார். வறுமை, மழை, இருள் போன்ற துயர்கள் இருந்த போதிலும் மாறனார் பசித்தோர்க்கு உணவளிக்கும் தம் கொள்கையிலிருந்து வழுவாது செயல்பட்டார்.

**8. நெல்முளைகளைச் சேகரித்து வந்தார்**

வயலில் விதைக்கப்பட்டிருந்த நெல் முளைகளைக் கைகளால் வாரியெடுத்து, தாம் கொண்டு வந்த கூடையில் நிரப்பிக் கொண்டு, அக்கூடையினை மேலே தூக்கித் தலையில் சுமந்தவாறு மன மகிழ்வுடன் வீட்டினை வந்தடைகின்றார். அவருடைய மனைவியார் அக்கூடையினை வாங்கி, நெல் மணிகளில் படிந்திருந்த சேற்றினை நீரால் சுத்தம் செய்து அலம்பி வைக்கின்றார். பிறகு சமையல் அடுப்பிற்கு விறகு இல்லையே என்று மாறனாரிடம் கூறுகின்றார். உடனே மாறனார் தம் வீட்டுக் கூரை விறகினை அடுப்பெரிப்பதற்காக அறுத்துத் தள்ளினார். மனைவியார் அவ்விறகுகளின் மூலம் அடுப்பில் நெருப்பேற்றி, நெல் மணிகளைப் பதமாக வருத்தெடுத்த பின்னர், அவற்றைக் குற்றி அரிசியாக்குகின்றார். அவ்வரிசியை உலையில் இட்டு சோறு சமைத்தபின், சோற்றுடன் உண்ணக் கறி வகைகளுக்கு இனி என்ன செய்வோம் என மாறனாரை நோக்கி வணங்கிக் கூறுகின்றார்.

**9. கீரையும் சுவையான உணவானது**

சிவனடியார் நீண்ட தூரம் பயணம் செய்து வந்திருப்பார். அவருக்குப் பசி மிகும். ஆகவே விரைவாக உணவு சமைத்தளிக்க வேண்டும் என்பதால், தம் வீட்டுக் கொள்ளைப் பகுதியில் இருக்கும் சிறிய கீரை நாற்றுகள் அனைத்தையும் பறித்தெடுத்துத் தம் மனைவியாரிடம் அளிக்கின்றார். மனைவியார் அக்கீரை வகைகளை நீரால் அலம்பிச் சுத்தமாக்கிய பின், தண்டு வேறு தழைகள் வேறாகக் கீரையை ஆய்ந்தெடுத்து, புனித பாத்திரத்தில் இட்டு கீரைக்குழம்பு, அவியல், துவையல், கடைசல் என பலவகைக் கீரை உணவுகளைத் தயார் செய்கின்றார்.

**10. இறைவனின் அரிய திருக்காட்சி**

இவ்வாறு உணவு சமைக்கப்பட்ட பின்பு, உறங்கிக் கொண்டிருக்கும் சிவனடியாரை தூக்கத்திலிருந்து எழுப்பி உணவு செய்விப்பதற்காக அவரை துயிலெழுப்பச் செல்கின்றனர். அப்பொழுது இறைவன் சோதி வடிவினனாகக் காட்சியளிக்கின்றார். சோதி வடிவில் ஈசனைப் பார்த்த மாறனாரும் அவரது மனைவியாரும் அப்படியே திகைத்து நிற்கின்றனர். அவர்களது திகைப்பை நீங்குமாறு பரமன் தன் மனைவியாகிய உமையம்மையோடு இடப வாகனனாகக் காட்சியளிக்கின்றார். மாறனார் ஈசனை வணங்கி மகிழ்கின்றார்.

**11. மாறனாரின் உயர்ந்ததொண்டு**

அடியார்க்கு உணவளித்துப் பசி நீக்கும் கொள்கையில் சிறந்து விளங்கிய மாறனாருக்கு இறைவன் அருளாசி வழங்குகின்றார். ஈசன் மாறனாரை நோக்கி நீரும், உம் மனைவியாரும் எம் உலகத்தினை அடைந்து, அங்கு செல்வத்திற்கு அதிபதியான குபேரன் உங்களுக்குத் தக்க பணிவிடைகள் செய்யுமாறு இன்பமுற்று வாழ்வீர்களாக என்று வரம் அருள்கின்றார். பசித்தோர்க்கு உணவளிக்கும் செயலே தருமங்களுள் மிக உயர்ந்தது என்பதைப் பரமன் தம் திருவிளையாடலின் மூலம் உணர்த்துகின்றார். மாறனாரின் சிவத்தொண்டும், சிவப் பேரன்பும், பசித்தோர்க்கு உணவளித்த பெரும்பேறும் இவ்வுலகம் இருக்கும்வரை நின்று நிலவுவதாகும்.

## 2 - வைணவம்

### பெரியாழ்வார் பாடிய, ' நெறிந்த கருங்குழல் மடவாய்'

சீதை, இலங்கையின் அசோகவனத்தில் சிறையிருந்தாள். 'சொல்லின் செல்வன்' என்ற சிறப்புடைய அனுமன், சீதையின் முன்னால் நின்றான். அவனைக் கண்ட சீதை, 'அரக்கர்களின் மாயத்தால் தன் முன்னால் யாரோ வந்து நிற்பதாகக் கருதிக் கலங்கினாள். 'என் முன்பு வந்து நிற்கின்றாயே, நீ யார்?' என்று அனுமனை அறியாதவளாகக் கேட்டாள். அதைக் கேட்ட அனுமன் மிகவும் கலங்கினான். சீதையைக் கண்டால், 'நீ இராமதூதனாக வந்திருப்பதை அவள் நம்பும்படியாக, சில குறிப்புகளை அவளிடத்தில் எடுத்துக் கூறுக' என்று இராமன் அனுமனுக்கு அறிவுறுத்தியிருந்தான். அனுமன் அக்குறிப்புகளை, சீதையிடம் எடுத்துக் கூறி, அவளது நம்பிக்கையைப் பெறுவதாக இப்பாசுரம் அமைந்துள்ளது.

***1. பரசுராமனின் கோபத்தை அடக்கிய இராமன்***

கோதண்டராமன், ஜனகனிடமிருந்த வலிமையான சிவவில்லை முறித்து, உன்னைத் திருமணம் செய்துகொண்டு, வெற்றி வீரனாக மிதிலையிலிருந்து, அயோத்திக்குப் புறப்பட்டார். இவ்வுலகிலுள்ள சத்திரிய மன்னர்களை அழிப்பதையே தனது சபதமாகக் கொண்டிருந்த பரசுராமர், உங்களது பயணத்தில் குறுக்கிட்டார். இராமனைத் தன்னுடன் போருக்கு அழைத்தார். இராமனும், அவருடன் கடும்போர் செய்து, அவரிடமிருந்த விஷ்ணு வில்லைப் பெற்றார். இராமனே, இச்செய்தியை நான் அறிந்து கொள்ளும்படியாகக் கூறியுள்ளார். நான் இராமதூதனே என்பதற்கு இது ஓர் அடையாளம்' என்று அனுமன் சீதையிடம் கூறினான்.

***2. மல்லிகைச் சரத்தால் இராமனைக் கட்டிவைத்தாய்***

அல்லிமலரைச் சூடுகின்ற கோதையே! உனது திருவடிக்கு வணக்கம். உன்னிடம் ஒன்று சொல்கிறேன், கேள்!. நீயும், இராமனும், நீயும் தனியிடத்தில் இருந்தவேளையில், அவனை நீ, மல்லிகைச் சரத்தால் கட்டிவைத்தாய் என்பதும் ஓர் அடையாளம்.

***3. இலட்சுமணனும் உடன் வந்தான்***

சிற்றன்னையாகிய கைகேயி, மந்தரையின் வார்த்தைகளால் மனம் மாறினாள். இராமன், பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்யவேண்டும் என்று தசரதனிடத்தில் வரம் கேட்டாள். தான் நினைத்ததை இராமனிடமும் கூறி, அவனைக் காட்டுக்கு அனுப்பிவைத்தாள்.

இராமன், காட்டுக்குப் புறப்பட்ட வேளையில், அவனைப் பிரிந்திருக்க முடியாமல், இலட்சுமணனும் அவனுடன் வந்தது ஓர் அடையாளம்.

**4. *குகனைத் தோழனாகக் கொண்டார்***

அயோத்திக்குத் தலைவனாகிய இராமபிரானின் தலைவியே, கேள்! இராமன் காட்டில் வசிக்கவேண்டி, கங்கைக்கரையை அடைந்தார். அங்கு, வேல்தாங்கிய வேடனாகிய குகனின் சிறந்த அன்பைப் பெற்றார். அவனைத் தமது சகோதரனாகவும் ஏற்றுக்கொண்டார். எல்லைகள் கடந்த இராமனின் அன்புக்கு, இதுவும் ஓர் அடையாளம்.

***5. பரதன் வந்து வணங்கினார்***

மானைப் போன்ற மென்மையான பார்வை கொண்ட வைதேகி! கற்கள் நிறைந்த கொடுமையான பல பாறைகளைக் கடந்து, சித்திரகூட மலைச்சாரலில், நீர் இராமபிரானுடன் தங்கியிருந்தீர்கள். இளவரசனாகிய பரதன், அங்கு வந்து உங்களைச் சந்தித்து அன்பு காட்டியதும் ஓர் அடையாளம்.

6. ***இந்திரன் மகன், ஜயந்தன் கண்ணை இழந்தமை*** உலகத்துக்குத் தாயாகிய நீயும், இராமபிரானும் சித்திரகூடத்தின் பர்ணசாலையில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தீர்கள். தங்கள் அழகில் மயங்கி, தீயநோக்கம் கொண்ட ஜயந்தன், அங்கு காகமாக மாறி உம்மைத் தொடவந்தான். இதனை அறிந்த இராமபிரான் அருகில் இருந்த சிறிய தர்ப்பைப்புல்லினை வீசி அக்காகத்தை விரட்ட முயற்சித்தான். அப்புல்லானது, பிரம்மாஸ்திரமாக மாறி ஜயந்தனைக் கொல்வதற்குத் துரத்தியது. உலகெங்கிலும் சுற்றித்திரிந்தும், தன்னைக் காப்பதற்கு யாரும் இல்லாததை உணர்ந்த ஜயந்தன், இராமனிடத்தில் சரண்புகுந்தான். இருப்பினும் வலிமையான அஸ்திரமானது, காகமாக இருந்த அவனது ஒற்றைக்கண்ணைக் குத்தியதால் அவன் பார்வை இழந்து துன்புற்றான். மாற்றான் மனைவியைத் தீய நோக்கத்தில் பார்கின்ற தவறினால், பெருந்துன்பம் ஏற்படும் என்பதை உணர்த்துகின்ற இவ்வரலாறும், இராமன் என்னிடத்தில் சொல்லி அனுப்பிய ஓர் அடையாளமாகும்.

***7. இராமன், மாயமானைத் தேடிச் சென்றதும் ஓர் அடையாளம்***

சித்திரகூடத்தில் நீங்கள் தங்கியிருந்தபொழுது, மாயமான் ஒன்று பொன்போன்ற பொலிவுடன் சுற்றித்திரிந்தது. அது தங்களுக்கு வேண்டும் என்று இராமனிடம் வற்புறுத்திக் கேட்டீர்கள். அதனைப் பிடித்துவருவதற்கு, கோதண்டராமனும் வில்லுடன் புறப்பட்டான். சற்றுநேரத்தில் இராமனின் துன்பக்குரல் கேட்பதாக நீங்கள் பொய்யாக உணர்ந்தீர்கள். அங்கு உங்களுக்குத் துணையாக இருந்த இலக்குமணனை உடனே அங்கிருந்து அனுப்பி, இராமனுக்கு உதவச் சொன்னீர்கள்’ என்பதும் ஓர் அடையாளம்.

***8. இராமனின் மோதிரம் இதுவே***

மை போன்ற கரிய கூந்தலை உடைய தாயே! குரங்குப்படைகளுக்குத் தலைவனாகிய சுக்கிரீவனுடன் இருந்து உம்மைத் தேடிக் கண்டுபிடிப்பதில் இராமபிரான் மிகுந்த முனைப்புடன் உள்ளார். அவரது தூதனாகவே நான் இங்கு வந்துள்ளேன். மேற்சொன்ன குறிப்புகளை உங்களிடத்தில் கூறி, உங்களுக்கு நம்பிக்கை தருப்படி இராமபிரான் சொல்லி அனுப்பியுள்ளார். மேலும், நீங்கள் என் மீது நம்பிக்கை கொள்வதற்காக, அவரது மோதிரத்தையும் அடையாளமாக என்னிடம் தந்து அனுப்பியுள்ளார்’ என்று அனுமன், சீதையிடம் கூறினான்.

***9. இராமனின் மோதிரத்தைக் கண்ட சீதையின் நிலை***

விசுவாமித்திர முனிவர் செய்த வேள்வியையும், முனிவர்களையும் காப்பதற்காக, இராமன் அவருடன் காட்டுக்கு வந்தான். அங்கு, அரக்கர்கள் பலரையும் வில்லால் அழித்து ஒழித்தான். அவனே, வெற்றித் திருமகனாக, மிதிலைக்கு வந்து, ஜனகனின் சிவவில்லை முறித்தான். அவனே, தனது மோதிரத்தை அடையாளப்பொருளாக என்னிடத்தில் கொடுத்து அனுப்பியுள்ளான். கோதண்டஇராமனின் திருக்கை மோதிரத்தை கண்ட அளவில், மீண்டும் உயிர் பெற்றவளாக சீதை பெரும்நிம்மதி அடைந்தாள். அதைத் தனது உச்சியில் வைத்து மகிழ்ந்து, உள்ளம் குளிர்ந்தாள்.

***10. திருப்பாசுரப் பயன்***

சீதை, தாயக இருந்து உயிர்களைக் காக்கின்ற தெய்வமகள். அனுமன் அவளிடத்தில் கூறிய அடையாளங்களை, திருவில்லிப்புத்தூரின் பெரியாழ்வார் திருப்பாசுரங்களாகப் பாடி மகிழ்ந்துள்ளார். இத்திருப்பாடல்களை, உள்ளன்புடன் பாடி பக்திசெலுத்துகின்ற உண்மையான அடியார்கள், உயர்வான வைகுந்தத்தில் தேவர்களுடன் இறையருளில் மகிழ்ந்திருக்கின்ற பேறுபெறுவார்கள்.

பார்வை வினாக்கள்

***சிறு வினாக்கள்: (2 மதிப்பெண்கள்)***

1. அனுமன் கூறிய பரதன், இலக்குவன் அடையாளச் சிறப்பைக் குறிப்பிடுக.
2. பெரியபுராணம் சிறுகுறிப்பு வரைக.
3. பெரியாழ்வார் – குறிப்பு வரைக.

***பெருவினாக்கள்: (6 மதிப்பெண்கள்)***

1. இளையான்குடிமாற நாயனார் வரலாற்றை விரித்தெழுதுக.
2. அனுமன் ‘சொல்லின் செல்வன்’ என்பதை நும்பாடப்பகுதி கொண்டு விரித்துரைக்க.
3. விருந்தோம்பல் பண்பினால் மாறனார் பெற்ற உயர்வை விளக்குக.
4. அனுமன் சீதைக்கு கூறிய அடையாளம் பற்றி விவரி.

1. பெரியபுராணம் எவ்வகை நூல்வகையைச் சார்ந்தது?

(அ). தொகைநூல் (ஆ). விரிநூல் (இ). முதல்நூல் (ஈ). வழிநூல்

2. மாறநாயனாரின் ஊர் எது?

(அ). சாத்தனூர் (ஆ). திருவாவடுதுறை (இ). இளையான்குடி (ஈ). தில்லை

3. திருமாலுக்குப் பல்லாண்டு பாடியவர் யார்?

(அ). பெரியாழ்வார் (ஆ). பேயாழ்வார் (இ). பூதத்தாழ்வார் (ஈ). ஆண்டாள்

4. குகனோடு தோழமை கொண்டவர் யார்?

(அ). இராமன் (ஆ). சிவன் (இ). பிரம்மன் (ஈ). இந்திரன்

5. வேளாளர் மரபில் தோன்றிய சிவனடியார் யார்?

(அ) இளையான்குடி மாறன் (ஆ) திருமூலர் (இ) ஆண்டாள் (ஈ) பெரியாழ்வார்

6. “அம்பொன் நீடிய அம்பலத்தினில் ஆடுவார்” – யார்?

(அ) திருமால் (ஆ) முருகன் (இ) சிவன் (ஈ) பிரம்மன்

7. வைதேகீ என்னும் பெயர் பெற்றவள் யார்?

((அ) ஆண்டாள் (ஆ) சீதை (இ) மணிமேகலை (ஈ) கண்ணகி

8. “வார் அணிந்த முலை மடவாய்” இப்பாடலடி யாரைச் சுட்டுகிறது?

(அ) ஆண்டாள் (ஆ) சீதை (இ) பார்வதி (ஈ) கண்ணகி

9. பசி நீக்குதல் முதலான அறங்களை சைவ சமயம் எவ்வாறு போற்றுகின்றது?

(அ).அடியார் பூசை (ஆ) காபாலிக பூசை (இ). மகேசுவரபூசை (ஈ). பைரவ பூசை

10. தவமாம் தவமிருந்த தையல் யார்?

(அ). கண்ணகி (ஆ). சீதை (இ). நளாயினி (ஈ). மணிமேகலை

11. பொரியபுராணத்தின் பாடல்களின் எண்ணிக்கை

(அ) 3486 (ஆ). 4286 (இ). 2486 (ஈ) 5486

12. பெரியபுராணத்தின் பெரும்பிரிவு.

(அ) சருக்கம் (ஆ). காண்டம் (இ). உரை (ஈ). செய்யுள்

13. கொழுநர் என்பதன் பொருள் ----?.

(அ) மாமன் (ஆமாமி (இ). கணவர் (ஈ) தம்பி

14. ‘சொல்லின் செல்வர் என்று போற்றப்படுபவர் யார்?.

(அ) அனுமன் (ஆ) சுக்ரீவன் (இ). வாலி (ஈ) இராமன்

15. அயோத்தியர் கோன் யார்?

(அ) தசரதன் (ஆ) சுக்ரீவன் (இ). பரதன் (ஈ) இராமன்

16. புதுவைப் பட்டர்பிரான் என்று போற்றப்படுபவர் யார்?

அ) சேக்கிழார் ஆ) சுந்தரர் இ) பெரியாழ்வார் ஈ) திருநாவுக்கரசர்

## UNIT-2

## SYLLABUS

**அலகு – II : அற இல சங்க இலக்கியம் :** சங்க இலக்கியங்கள் அறிமுகம், **எட்டுத்தொகை, பத்துப்பாட்டு**

அ). **எட்டுத்தொகை**

**நற்றிணை :**

1. நோ, இனி வாழிய நெஞ்சே-குறிஞ்சி – தலைவன் - 190
2. நின்ற சொல்லர் –குறிஞ்சி – தலைவி – 01

**குறுந்தொகை:**

1. நிலத்தினும் பெரிதே – குறிஞ்சி -தோழி - 3
2. கழனிமா அத்து - மருதம் – பரத்தை - 283

**ஐங்குறுநூறு:**

1. தாய் சாப் பிறக்கும் – தோழி – மருதம் - களவன் பத்து: 24
2. வாழ் ஆதன், வாழி - தோழி – மருதம் –தோழி கூற்றுப் பத்து: 01

**பதிற்றுப்பத்து : ஏழாம் பத்து**

1. எறிபிணம் இடறிய செம்மறுக் – 65
2. வாங்குஇரு மருப்பின் தீம்தொடை- 66

**பரிபாடல்:** பரிபாடல் திரட்டு- வையை:

விரிகதிர் மதியமொடு – வையை புனல் 11:1-15, வரையன புன்னகம்- நீர்ப் பூந்துறை 11:16-30, பாய் இரும் பனிக்கடல் – ஓங்கு விறல் சேஎய்! 1:01-54.

**கலித்தொகை :**

1. அகன்ஞாலம் விளக்கும்-நெய்தல் கலி –தலைவி- 119.
2. கருங்கோட்டு நறும்புன்னை - நெய்தல் கலி – தலைவி -123

**அகநானூறு :**

1. ஈன்றுபுறம் தந்த எம்மும் உள்ளாள் – பாலை - நற்றாய்-35

**புறநானூறு :**

1. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் -183
2. பல்சான்றீரே -பொதுவியல்-195

**ஆ). பத்துப்பாட்டு**: குறிஞ்சிப்பாட்டு – **அறத்தொடு நிற்றல்**

### அ). எட்டுத்தொகை

## 1 – நற்றிணை

1. குறிஞ்சி – தலைவன் கூற்று

நெஞ்சமே! பகைவருடைய புகுதற்கரிய அரணங்களை வென்றுகொண்ட மாரி போல்கின்ற கைவண்மையையும் கள்ளுணவையும் திதலை பரந்த வேற்படையையுமுடைய சேந்தன் என்பானுக்கு; தந்தையாகிய தேன்மணங் கமழும் விரிந்த மாலையையுடைய அழகிய தேரினையுடைய அழிசி என்பவனது; நெற்கதிர்களினிடையே வண்டு மூசுகின்ற நெய்தலின் மலர்கின்ற பூவினின்று; தேன் வடிதலையுடைய வயல் சூழ்ந்த “ஆர்க்காடு” என்னும் ஊரையொத்த; விருப்பம் வருகின்ற பருத்த தோளினழகோடு பெருமையடைந்த வலையிலகப்பட்ட மானினது கண்போன்ற மருண்ட குளிர்ச்சியையுடைய கண்களையுடைய இளமையளாகிய தலைவியின்; சிலவாய் மொழியையுடைய சிவந்த வாயினின்றெழுகின்ற நகைக்கு மகிழ்ந்தோய்; அங்ஙனம் மகிழ்ந்ததனாலே பின்பு கிடைக்கப் பெறாயாய் இனி நீ துன்புறுவாய் காண்; அவ்வகையாகிய துன்பத்துடனே நெடுங்காலம் வாழ்வாயாக;

2. குறிஞ்சி – தலைவி கூற்று

தோழீ ! நம் காதலர் நிலைமை தவறாத வாய்மையுடையவர்; நெடிதாகத் தோன்றுகின்ற இனிமையுடையவர்; எப்பொழுதும் என் தோள்களைப் பிரியும் அன்னதொரு குணக் குறைபாடு இல்லாதவர்; அத்தகைய மேதக்கோருடைய நட்பு; தாமரையின் தண்ணிய தாதினையும், மேலோங்கிய சந்தனத்தின் தாதினையும் ஊதி, அந்தச் சந்தன மரத்தில் வைத்த இனிய தேன் போலத் திண்ணமாக மேதக்கன ஆதலின்; அவர் நீரையின்றியமையாத உலகியல் போலத் தம்மை யின்றியமையாத நம்பால் முன்பு விருப்பமிக வைத்தருளி; பின்பு பிரிதலால் நம் அழகிய நெற்றி பசலையூர்தற்கு அஞ்சி; செய்வதறியாராய்த் தடுமாற்றமடைவாரோ?; அங்ஙனம் செய்யார்காண்.

## 2 – குறுந்தொகை

1. மலைப் பக்கத்தில் உள்ள, கரிய கொம்புகளை உடைய குறிஞ்சி மரத்தின் மலர்களைக் கொண்டு, பெரிய தேனை வண்டுகள் செய்தற்கு இடமாகிய நாட்டை உடைய தலைவனோடு யான் செய்த நட்பானது, பூமியைக் காட்டிலும் அகலம் உடையது; ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது; கடலைக் காட்டிலும் அளத்தற்கரிய ஆழம் உடையது.

(முடிபு) நாடனொடு செய்த நட்பு, பெரிது; உயர்ந்தது; அளவினது என்க.

2. வயல் அருகில் உள்ள மா மரத்தினது கனிந்து வீழ்கின்ற இனிய பழத்தை பொய்கையில் உள்ள வாளை மீன்கள் கவ்வி உண்ணுதற்கு இடமாகிய ஊரை உடையவன் தலைவன். எம்முடைய வீட்டில் எம்மை வயமாக்குதற்குரிய பெரு மொழிகளைக்கூறிச் சென்றவன். தம்முடைய வீட்டில் முன்னின்றார் தம் கையையும் காலையும் தூக்க தானும் தூக்குகின்ற கண்ணாடியுள் தோன்றுகின்ற பாவையைப்போல தன்னுடைய மகனுடைய தாய்க்கு அவள் விரும்பியவற்றைச் செய்வான். முடிபு: ஊரன், எம்மிற் பெருமொழி கூறிப் புதல்வன் தாய்க்குத் தம்மில் மேவன செய்வான்.

## 3 - ஐங்குறுநூறு

1. அன்னாய்! தன் தாய்சாவத் தான் பிறக்கும் புள்ளிகளையுடைய நண்டிணோடு, தன் பிள்ளையையே தான் தின்னும் முதலையையும் உடையது அவன் ஊர். அவ்வூரவனை நம் தலைவன் இவ்விடத்தே இன்னமும் வந்தனன் இல்லையோ? அவன் தன் பொற்றொடிகள் ஒலிக்கத் தன்னைத் தழுவிய பெண்களின் நலத்தினைக் கவர்ந்துகொண்டு, பின் அவரைப் பிரிவுத்துயராலே வருந்தி நலனழியுமாறு கைவிடுவதுதான் எதனாலோ?

கருத்து

நினக்கு மட்டுமே கொடுமை செய்தான் அல்லன். தன்னைத் தழுவிய பெண்களையெல்லாம் நுகர்ந்தபின் அவர் வருந்தத் கைவிடுவதே அவன் இயல்பாகும். இதுதான் எதனாலோ என்பதாம்.

2. வாழி ஆதன் வாழி அவினி

ஆதன் வாழ்க. அவினி வாழ்க! நெல் பலவாக விளைவதாக, பொன்விளம் பெரிதாகிச் சிறப்பதாக, எனத் தலைமகள் வேண்டினள். பூவரும்புகள் கொண்ட காஞ்சி மரத்தையும், சினைகளைக் கொண்ட சிறுமீன்களையும் மிகுதியாகவுடைய ஊருக்குரியவனுமாகிய தலைவன் வாழ்க! அவன் ஏவலாளுமாகிய பாணனும் வாழ்க! என யாங்கள் வேண்டினோம்.

கருத்து

தன் இல்லறக் கடமைகள், சிறப்பதற்கானவற்றைத் தலைவி விரும்பி வேண்டினாள். யாங்களோ அவள் நலன் பெருகுதற்காக நின் நலனை வேண்டினோம்

## 4 - பதிற்றுப்பத்து

1. **உரை :** இழையணிந்த உயர்ந்த ஒப்பனை செய்தாற்போல் வருகின்ற இளமுலையினையும் , மாட்சிமைப்பட்ட வரிகளையுடைய அல்குலினையும் அகன்ற கண்ணினையும்; மூங்கிலையொப்ப அழகிய பெரிய மூட்டுக்கள் பொருந்திய (தொடியணிந்த) பருத்த தோளினையும் ; அழகிய கடவுளரையும் ஏவல்கொள்ளும் கற்பினையும்; சேய்மைக்கண்ணும் சென்று மணம் கமழும் நறிய நெற்றியினையும்; செவ்விய அணிகளையுமுடையாளுக்குக் கணவனே. பாண் குடும்பங்களைப் புரப்பவனே; பரிசிலர்க்குச் செல்வமாயிருப்பவனே; பூணாரமணிந்து விளங்கும் அகன்ற புகழ்நிறைந்த மார்பினையுடையோனே. இனிய இசை தொடுத்தலையுடைய நரம்பினா லமைந்த பாலையாழ் வல்லவனொருவன்; அழுகைச் சுவைக்குரிய உறுப்பினையுடைய பாலைப்பண்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக மாறிமாறி இசைத்தாற் போல; சேற்றை உண்டாக்கும் மழை போல; கள்ளை வழங்கும்; விழாக் களத்தின் செல்வத் தோற்றத்தையுடைய; மகிழான் திருவோலக்கத்தின் கண்ணே நின்னுடைய நாட்கால இன்ப விருக்கையினை நன்கு கண்டு மகிழ்வுற்றேம்.

2. **உரை :** வளைந்த கரியதண்டினையுடைய; இனிய இசைக்குரிய நரம்புகளால் நிறைந்த; இசையின்பத்துக்கு இடமாகவுள்ள பேரியாழிடத்தே; பாலைப் பண்ணை யெழுப்பி; சேரனை நினைந்து செல்லும்; முதிய வாய்மையையுடைய இரவலனே. வெகுண்டு மேல்வரும் பகைவரது மிக்க வலியைத் தடுத்தற்குரிய ஒழுங்கினால் அப்பகைவரால்

அழித்தற்கரிய படைவகுப்பையும்; நாட்காலையிலே மழைக் கூட்டந் தங்கிய மலையுச்சியை ஒக்கும்.

தோற்றத்தையுடைய பரிசையினை மேலே தாங்கியெழுகின்ற ஒளி விரிந்து விளங்கும் வேற்படையையும்; மாலையுடலிற் பின்னுவதுபோல வாள் சுழற்றுகின்ற வாள் விழாவினையுமுடைய போர்க்கண் அன்றிப் பிறவாற்றால் இறத்தலை விரும்பாத வீரர்; பனங்குருத்துடனே சேர்த்துத் தொடுத்த; வெற்றித்திரு விரும்பும் வாகையினது தூய்மையினையுடைய பூப்போல; பூக்களையுடைய முல்லைப் புதரிடத்தே மொய்க்கும் வண்டினம்; காட்டிலே பிடவமரத்தின் தொடுத்தது போலப் பூக்கும் பூக்குலையிலே தங்கும்; உயரிய பளிங்குடன் விரவிய சிவந்த பரல்கள் கிடக்கின்ற முரம்பு நிலத்திலே; அங்கு வாழ்வோர் விளங்குகின்ற ஒளிக் கதிரையுடைய அழகிய மணிகளைப் பெறுகின்ற இடம் அகன்ற ஊர்களையுடைய நாட்டிற்கு உரிய தலைமகனான செல்வக் கடுங்கோ வாழியாதன்.

இடி முழக்கத்தைப் போன்ற ஓசையினைச் செய்யும் முரசுடனே தப்பாத வஞ்சினத்தைக் கூறிச்சென்று பகைவருடைய வேலேந்திய படைக்கூட்டம் செய்யும் போர் அறக்கெடும்படியழித்து; அவர்களைக் கொன்று; அஞ்சினோர் முதுகிட்டோடச் செய்ததனாலுண்டாகிய; பிணங்கள் நிறைந்த போர்க்களத்தே; தோற்ற வேந்தர் பழையதாகிய திறையாகத் தந்த யானையோடு நெல்லையளக்கும் மரக்கால் தன் வாய் விரிந்து அதனைச் சுற்றிலும் புறத்தேயிட்ட செப்புறை தேய்ந்து கழன்றோடுமாறு; நெல்லாகிய உணவை நிறைய அளந்து கொடுப்பன் என்று அறிந்தோர் சொல்லுவார்கள்.

## 5 - பரிபாடல்

**வையை : கோ**ள்கள் மழைபெய்தற்குரியநிலையில் அமையக் கார்காலத்தில் சையமலைக்கண் மழைபெய்தது. வையையில் வெள்ளம் மிக்கது. மலையிலுள்ள புன்னையும் கரைகளிலுள்ள சுரபுன்னையும் சண்பகமும் தேற்றா மரமும் வில்வமும் வேங்கை மரமும், காந்தளும், தோன்றியும் நீலமலரும் ஆகிய இவற்றை அருவியானது கொண்டுவந்து சொரிய அவற்றை அலைகள் தள்ளிக் கொண்டுவந்து

திருமருதந்துறைக்கண்ணே தந்தன. அதனால் அத்துறையைப் பூப்பறிக்கும் மக்கள் பல நிறங்கொண்ட மலர்களைக் கொணர்ந்து குவிக்கும் மலர்மண்டபமென்பேனோ? வையையாகிய அரிவையது ஆடையென்பேனோ? கள்ளைப் பருகும் நிலமகளது மிடறென்பேனோ? இவற்றுள் யாதென்று அதனைச் சொல்லுவேன்!

பிறை பூர்வபட்சந்தில் வளர அதன் நிலவு எங்கும் பரந்ததைப் போல வையை நதி எங்கும் நீரைப் பரப்பி உலகிற்குப் பயன்பட்டது. ஆனால் அபரபக்கத்துச் சந்திரனைப் போல வையையானது வற்றிய காலத்திலும் அஷ்டமி சந்திரனைப்போல ஒரு பகுதி குறைவதையன்றி அமாவாசையைப் போல முற்றுங் குறைபடுதலைக் காண்பாரில்லை. நெடுந்தூரத்தைக் கடந்து வந்த வையையே! நீ வெள்ளத்தைப்பெற்ற நாளின் புது வருவாயை இந்த உலகம் பெறுவதோடு வற்றின நாளின் புது வருவாயையும் பெறும்படி இந்நீர் மிகுதி தணிந்து ஏகுவாயாக!

வையையே! மந்தணமாக இன்புற்றமைந்தரும் மகளிரும் காமச்சிறப்புடைய அக்களவொழுக்கத்தைக் கைவிட்டுத் தாழ்வுடைய கற்பொழுக்கத்தை மேற்கொண்டாற்போல நீ நின் பிறந்தகமாகிய மலையைக் கைவிட்டுக் கடலாகிய தலைவனது இல்லத்துக்குத் தனியே செல்லுதல் இழிவாகும்; ஆதலின் அங்கே செல்லற்க! என்று கண்டார் சொல்ல வையை நதி வந்தது. தலைவியைக் கைக்கொண்டு படையொடும் சென்ற தலைவனை அத்தலைவியின் சுற்றத்தார் சுரத்திடையிற்சென்று மறித்துப் பொருதாற்போல மதுரையிலுள்ள மக்கள் இடையே தடை செய்து புகுந்து நீராடுவதற்குரியதாயிற்று அவ்வையைநதி. அவர்களுட் சிலர் நெட்டியினாலாகிய வாளைச் சுழற்றுவார்: அதனாலாகிய ஈட்டியை ஏந்துவார்; கொள்ளுவதற்குரியார் கோல்கொள்ளச் சிலர் தேரில் ஏறுவார்:

சிலர் குதிரையையும் யானையையும் நீர்வெள்ளத்துக்குள் விட்டு ஊர்ந்து உழக்குவார். மூங்கிற் கழியால் நீரைத் தெறிப்போரை அரக்கு நீரையுடைய வட்டினால் வீசுவார் சிலர். மாலையைச் சுழற்றியெறிவார்மேல் கொம்பிலுள்ள நீரை வீசுவார் சிலர். இங்ஙனம் தம்தம் அன்பரோடுஅளவளாவித் திளைக்கும் இத்தோற்றத்தால் வையையானது போர்க்களத்தை ஒத்தது.

இளவேனிற் காலத்தில் அவ்வையயகம் தேவருலகத்தில் திரியும் விமானங்களைக் காட்டும் தெளிந்த நீரோட்டத்தையுடையது. அக்காலத்தில் நீராடற்கமைந்த அணிகளை அணிந்த ஆடவர்; மகளிரோடு இன்புறும் பொருட்டுப் பாகோடு கூடிய இளமதுவை நுகர்ந்து களிப்புமிக்குச் செவிநிறையப் பாட்டைக் கேட்டு இன்புறுவர். அழகாகிய மதுவை ஒருவரினொருவர் கண்ணாலுண்பர். வையையே! இங்ஙனம் கார்காலத்துக்கலங்கி வேனிற்காலத்துத் தெளிதலால் உன் நிலைமை எப்பொழுதும் ஒருபடியாயிருப்பதில்லை.

கார்வானம் அதிர்குரல் நீங்கப்பனி மிகுதலாற் குளிரால் நடுங்குதலையுடைய முன்பனிப் பருவத்தில் மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் ஆகமங்களை உணர்ந்த பூசகர் அத்திருவாதிரைக்குத் தெய்வமாகிய சிவபெருமானுக்குரிய விழாவைச் செய்யத் தொடங்கினர். அந்தணர் பொற்கலத்தை ஏந்தினர்; உலகம் மழையாற் குளிர்வதாக என்று அம்பா ஆடலைச் செய்யும் கன்னியர் முதிய அந்தண மகளிர் நோன்பு செய்யும் முறைமையைக்காட்டப் பனியையுடைய விடியற் காலத்தே நீராடினர்; அங்ஙனம் ஆடிய பின்னர் குளிர்வாடை வீசுவதால் அம்மகளிர் கரையில் அந்தணர் வேதமந்திரங்களால் வளர்த்த அக்கினியினருகிற்சென்று தம் ஈர ஆடைகளை உலர்த்தினர். அவ்வந்தணர் அந்த அக்கினியினிடம் கொடுக்கும் அவியானது வையையே! நினக்கு வாய்த்ததாக இருந்தது.

மையோலை பிடித்த இளையபிள்ளைகளின் விளையாட்டிற்கு மாறாக எழுந்து காமக்குறிப்பில்லாத விளையாட்டைச் செய்கின்ற ஆயத்தினையுடைய அக்கன்னி மகளிர் தம்புலன்களையடக்கித் தவத்தைப் பலகாற் செய்தோ தம் தாய்மார்க்கருகில் நின்று தைந்நீராடலாகிய தவத்தை நின்பாற் செய்யப் பெற்றனர்? சொல்வாயாக. அங்ஙனம் தைந்நீராடும் பொழுது ஒருத்தி தன் காதில் நீல மலரை அணிந்துகொண்டு வேறொருத்தியைப் பார்த்தாள்; அவள் அசோகமரத்தின் தளிரைத் தன்காதின் கண்ணே செருகிக்கொண்டாள். முன்னவள் அணிந்த நீலமலர் அவ்வசோகந் தளிரின் ஒளியால் இளவெயிலைப் போலாயிற்று. அப்பொழுது பின்னவள் முன்னவளைச் சுட்டி "இவள் தன்காதுகளில் நீலமலரைச் செருகி நான்கு விழி படைத்தாள்" என்றுசொல்லிக் கொற்றவையின் திருக்கோலத்துக்கு ஒப்பாகும்படி நெற்றியிலுள்ள கனல் விழியைப்போலத் தோற்றும் வண்ணம் திலகமொன்றை இட்டாள்.

பவளவளையைத் கையிற் செறித்த ஒருத்தியைக் கண்டு வேறொருத்தி குவளைத் தண்டைப் பச்சை வளையாகத் தன் கையில் அணிந்து கொண்டாள்.செங்கழுநீர்ப் பூவினாற் கண்ணி தொடுத்த ஒருத்தியை நில்லென்று சொல்லுபவளைப் போல வேறொருத்தி மல்லிகையோடு நெய்தற் பூவை விரவித்தொடுத்தாள்.

முன்பு ஒருவன் வையையுள் வாழைத்தண்டைத் தழுவி நீந்தும்போது ஒருத்தியைக் கண்டான்; கண்டபொழுதில் அவனது நெஞ்சத்தை அவள் கவர்ந்தாள். அதனால் கைசோர்ந்தது. அவனுடைய கண் அவளிடத்திலே நின்றது. அவன் விரும்பின அவளிருந்த இடத்தே கொண்டு செல்லாதே நீர் தன்னுடைய போக்கில் அவனை இழுத்துச்சென்றது. அதனையறிந்த அவள் ஆயத்துடன் நில்லாமல் அவனைத் தொடர தாய் அவ்வன்புடைமையை அறியாமல் "தனியே செல்லாதே; ஆயத்தோடு சேர்ந்திரு" என்று விலக்கினாள்; அதனால் அம்மகள் அரற்றினாள். இங்ஙனம் அரற்றும்படி கார்காலத்து வெள்ளமானது கரையைப் பொருது வந்தது. இப்பொழுது அங்ஙனம் இராமல் "தைந்நீரே! யாம் ஆடும் அளவோடு தெளிந்து வருகின்றாய். நீ தக்காய்" என்பார் சிலர்; "எம் காதலரைத் தழுவும் வீறுபெறுகவென்று வேண்டுகின்றோம்" என்பார் சிலர்; "பூவில் விழும் வண்டு பின்னர் அப்பூவை நீங்கித் தனியேவிட்டுப் போவது போலப் போகாமல் எம்மால் விரும்பப்படுங் கணவர் எம்மைப் பாதுகாப்பாராக" என்பார் சிலர்; "எம் கணவரும் யாமும் கிழவர் கிழவியரெனப்படாமல் இத்தவம் நிலைபெற்ற இளமையைத் தரச் செல்வத்தோடும் சுற்றத்தோடும் நிலைபெறுக" என்பார் சிலர்.

"இவ்வழகுடையாள் தன்னைக் கண்டாரைத் தீண்டி வருத்துந் தெய்வம் போன்றவள்; இவளைப் பாருங்கள். அங்குள்ளவள் காமனுக்குரிய கருவூலமும் படையுமாவாள்; அவளைப் பாருங்கள். மகளிர் விலக்கவும் நீங்காமல் அவர்களுடைய மாலைகளிலுள்ள பூவை ஊதும் வண்டினம் யாழைப் போலப்பாடும் இசையைக் கேண்மின்; இனிய சுரும்பினது பாலை இசையைக் கேண்மின்; விளரிப் பாலையில் தோன்றும் யாமப் பண்ணைத் தாளத்தோடு பாடும் தும்பியினத்தைக் காண்மின்: தான் விரும்பிய பூவை நெரித்த ஒருத்தியைக் கோபத்தோடு அடித்து மீண்டும் அடிக்கவரும் ஒரு தும்பியின் கோபத்தைப் பார்மின்" என்று சில ஆடவர் அங்கே நிகழ்வனவற்றைக் காட்டினர்.

பரிபாடலாற் புகழ் பெற்ற வையையே! கன்னித் தன்மை முதிராத கைக்கிளைக் காமத்தைத் தருகின்ற நின்னிடத்து இத்தைந் நீராடலை முற்பிறப்பிற் செய்த தவத்தாலே இப்பிறப்பிற் பெற்றேம்; அதனை நின் நீர் நிறைவின் கண்ணே மறுபிறப்பினும் பெறுவேமாக!

இங்ஙனம் வரைவு மலிந்த தோழி வையையை நோக்கித் தலைமகன் கேட்பக் கூறினாள்.

**செவ்வேள்** : பிணி முகமென்னும் யானையின் மேல் எழுந்தருளி வேலாயுதத்தால் சூரபன்மனாகிய மாமரத்தைத் தடிந்து கிரவுஞ்ச மலையை ஊடறுத்தோய்! ஆறு திருமுடியை உடையோய்!

நீ ஆறுதலையுடனும் பன்னிரண்டு தோளுடனும் சூரியனது எழுச்சி போன்ற நிற அழகுடனும் தாமரைப் பூவின்கண் தோன்றிய தோற்றத்தை உடையை. "சங்காரக்கடவுளுக்குமகனே! செவ்வேளே! சால்பினையுடையாய்! தலைவனே!" என்று வெறியாட்டில் வேலனாகிய படிமத்தான் ஏத்தும் வெறிப்பாட்டும் உள; இவ்வுலகிற்கெல்லாம் நீயே தலைவனாதலின் அவ்விடத்து அவன் கண்டு ஏத்துகின்ற அப்பாட்டுக்கள் மெய்யல்ல; ஆயினும் அங்கே நீ வெளிப்படுதலால் அவை பொய்யுமல்ல; அவன் ஏத்துவனவற்றுள் ஒன்றாகியவழி தலைமைச் சிறப்பினையுடைய நீ அச்சிறப்பின்றி நிற்பாய்; ஆயினும் நல்வினையாற் சிறப்புடைய உயர்பிறப்பினராதலும் தீவினையால் இழி பிறப்பினராதலுமாகிய இது நின்னாணைக்கண்ணது; ஆதலின் அச்சிறப்பு நினக்கு ஒருகாலும் ஒழியாது.

நான்முகனாகிய பாகன் செலுத்த வேதக் குதிரைகளைப் பூட்டிய பூமியாகிய தேரையூர்ந்து நாகம் நாணாகவும் மலை வில்லாகவும் கொண்டு திரிபுரங்களை ஓர் அழலம்பினால் அழியும்படி: எய்தவனும் அமரர்களுடைய வேள்விப்பாகம் உண்டவனும் பசிய கண்ணையுடையவனுமாகிய இறைவன் உமாதேவியாரோடு இன்புறுகையில் உண்டான கருவை இந்திரனுடைய வேண்டுகோளுக்கு இணங்கிப் பலவாகச் சேதித் தருளினான். அக்கருவை முனிவர்கள் எழுவரும் பெற்றுத் தீயை மூட்டி அதன்கண் அவியோடு பெய்தனர். பின்னர் அதனை அருந்ததி ஒழிந்த ஏனையவராகிய கார்த்திகை

மாதர் அறுவரும் உண்டு கருப்பங்கொண்டு சரவணப் பொய்கையில் தாமரைப் பூவாகிய பாயற்கண்ணே நின்னைப் பெற்றாரென்பர்.

முருகா! அவ்வாறு நின்னைப்பெற்ற அன்றே இந்திரன் இகல் மிகுதியால் நின்மேல் தனது வச்சிராயுதங் கொண்டு எறிய ஆறு வேறு உருவமாகிப் பின்னும் ஒருவனாயினை.

குழவிப் பருவத்தில் முற்ற வளராத திருமேனியினையுடைய நீ விளையாட்டாகச் செய்த போரில் படைக்கலமில்லாத நின்கைக்கு இந்திரன் தோல்வியுற்றான்; ஆதலால் இவ்வாற்றலுடைய இவனே நம் சேனைக்குத் தலைவன் என்று கருதி நினக்கு அக்கினி தேவன் கோழியைத் தந்தான். இந்திரன் மயிலையும் யமன் வெள்ளாட்டு மறியையும் தந்தனர். அங்ஙனம் அவரும் பிறரும் தத்தம் மெய்யினின்றும் வாங்கிப் படையாகத் தந்த மறியும் மயிலும் கோழிச்சேவலும் வில்லும் மரனும் வாளும் ஈட்டியும் கோடரியும் மழுவும் கனலியும் மாலையும் மணியும் ஆகிய இவற்றைப் பன்னிரண்டு திருக்கரங்களிலும் கொண்டு அத்தாமரையினின்றும் பெயராத அவ்விளமைப் பருவத்திலேயே தேவர் சேனைக்குத் தலைவனாயினை; அதனால் அவர்களுக்கு அரசனாகிய இந்திரனது புகழ் வரம்பைக் கடந்தோய்! உருள்கின்ற பூங்கொத்தையுடைய கடப்பமலர் மாலையையணிந்தோய்! உயிர்களைச் செறுகின்ற தீயநெஞ்சத்திற் சினத்தை உடையோரும் அறத்தின்கண் சேராத புகழில்லோரும் கூடாவொழுக்கத்தால் அழிந்த தவவிரதத்தினரும் "இப்பிறப்பின் நுகர்ச்சியே உண்மை; மறுபிறப்பு இல்லை" என்னும் மடவோருமாகிய இவர்கள் நின்தாள் நிழலை அடையார். நினது குணத்தை ஏற்றுக்கொண்டாராகிய அறங்கொண்டோரும் வீடுபெறும் குணமுடையோராகிய மாதவரால் வணங்கப்பட்டோரும் நின் தாள் நிழலை அடைவர்; ஆதலால் நின்னை யாம் இரந்து வேண்டுவன நுகர்பொருள்களும் அவற்றைப் பெறுதற்குக் காரணமாகிய பொன்னும் அவ்விரண்டாலும் நுகரும் நுகர்ச்சியுமல்ல; எமக்கு வீடு பயக்கும் நின்அருளும் அதனைப்பெற நின்னிடத்தே செய்யும் அன்பும் அவ்விரண்டாலும் வரும் அறமுமாகிய இம்மூன்றையுமே வேண்டுகின்றேம்; அருள் புரிவாயாக.

## 6 - கலித்தொகை

1. **பொருளுரை:** அகன்ற உலகத்திற்கு ஒளியைத் தந்து பின் அப்பகல் வேளையை விழுங்கியது போல கதிரவன் கதிர்களைச் சுருக்கி மலையில் சேர, போரில் மிகுகின்ற சக்கரத்தை உடைய திருமாலின் நிறம் போல கருமை படர, நிலவாலே இருட்டை ஓட்டுவதுபோல அழகிய நிலா தோன்ற, துயிலைப் பெற்ற கண்களைப் போல திரண்ட தண்டினையுடைய மலர்கள் கூம்ப, தன் புகழைக் கேட்டு நாணிய சான்றோரைப் போல தலையைச் சாய்த்து மரங்கள் துயில, சிரிப்பவை போல அரும்புகள் புதர்களில் மலர்ந்து விளங்க, சிறிய மூங்கிலால் செய்த குழல் இசைபோல வண்டு பாட, ஆரவாரத்துடன் பறவைகள் தம் குஞ்சுகளை நினைத்து தங்கள் கூடு சேர, பசுக்கள் கன்றுகளை காணும்பொருட்டு விருப்பத்துடன் ஊரின் மன்றத்தை அடைய, விலங்குகள் தங்கள் தங்குமிடங்களை அடைய, மாலை ஒளி கொள்ள, அந்தணர்கள் அந்தி நேரத்தை எதிர்கொள, மகளிர் செந்தீ உடைய விளக்குளை ஏற்ற, தூய அணிகலன்களை அணிந்த மகளிரின் உயிரை நீக்கும் பொழுது இம்மாலை நேரம் என்று அறியாதவராய், இந்நேரத்தை மாலை என்று அறியாமையால் கூறுகின்றனர்.

2. புன்னை மலர்கள் கருநிறக் கிளைகளைகளில் பூத்துக்கிடக்கின்றன. சுரும்பு வண்டுகள் ஓசை கொடுத்துக்கொண்டு அவற்றில் தேனை உண்கின்றன. கருநிறத் தும்பிகள் ஒத்த ஓசையுடன் அவற்றில் தேன் உண்கின்றன. அதனால் 'இம்' என்னும் ஒலி கேட்கிறது. இந்தப் பாடலையும், யாழிசையையும் கேட்டுக்கொண்டு ஒருவன் தூங்குவது போல, கடலோரத்தில் கானல் நிலம் அமைதியாக உறங்குகிறது. ஒருவரை ஒருவர் காணமுடியாத இருளைப் பரப்பும் இரவு வேளையில் மாண்பு இல்லாத காம நோயை எனக்குத் தந்துவிட்டு, என்னை விட்டுவிட்டு அவனிடம் சென்றாயே, என் மட நெஞ்சமே, நீ அவனைக் கண்டாயா, காணவில்லையா? கொல்லும் சுறா மீன்கள் மணந்து கூடித் திளைக்கும் இருளும் மாலை வேளையில், என்னைத் துன்பப்படுத்திக்கொண்டிருப்பவனிடம் சென்றாயே என் மடமை கொண்ட நெஞ்சமே, நீ அவனைத் நழுவினாயா, தழுவவில்லையா? உறவு மணம் புரிந்துகொண்ட பறவைகள் தாம் வாழும் இடத்துக்குச் செல்லும் காலத்தில் செறிந்திருந்த என் வளையல்களைக் கழலும்படிச் செய்தவனிடம் சென்றாயே, என் மட நெஞ்சமே, நீ அவனைத் தெரிந்துகொண்டாயா, தெரிந்துகொள்ளவில்லையா? என்றெல்லாம் நான் எண்ணி

இரவும் பகலும் தூங்காமல் கலங்கும்படி எனக்குத் துன்ப நோய் செய்தவனிடம் ஏதோ பெற்றுவிடலாம் என்று எண்ணிக்கொண்டு கடலலை மீண்டும் மீண்டும் கரையேறித் திரும்புவது போல வருந்துகிறாயே, என் மடமை கொண்ட நெஞ்சமே, நீ வருந்துவதுதான் மிச்சம்.

காப்பு மிகுதிக்கண் ஆற்றாத தலைவி தலைவன்பால் சென்ற நெஞ்சினை நோக்கி அழிந்து கூறியது

## 7 - அகநானூறு

1. வான் அளாவிய மதிலை யுடைய, நன்றாகிய மனை தனிமையுற, பெற்றுப் பாதுகாத்த எம்மையும் நினையாளாய்; ஒப்பற்ற மணி மாறி மாறி யொலிப்பதம், கடையாணியிட்ட காம்பினையும் கூரிய முனையையும் உடையதுமாய, நெடிய வேலையுடைய கோட்டை மழவராகிய வெட்சியார் போர்முனையில் வென்று ஆக்களை மீட்டு, அவ் வெட்சியாரை மேட்டு நிலத்தே வீழ்த்திய, வில்லையே ஏராகக்கொண்டு வாழும் வாழ்க்கையினையுடைய சிறந்த அம்பினையுடைய கரந்தை வீரர்கள், தங்கள் வலிய ஆண்மையாலிட்ட பதுக்கைக் கண்ணுள்ள கடவுளை வழிபடற்கு, அந் நடு கல்லில் மயிற்றோகைகளைச் சூட்டி துடியை அடித்து, நெல்லாலாக்கிய கள்ளொடு, செம்மறிக் குட்டியைப் பலி கொடுக்கும், வழிப்போதற்கு இயலாத கவர்த்த வழிகளை யுடைய புலால் வீசும் அரிய சுரநெறியில், செல்லத் துணிந்து பிறளொருத்தியாக ஆயினாள் எனினும்; அன்பு மிக்க உள்ளத்தோடு அவளைப் பலகாலும் அணிவித்து, வேளது அழகிய நலனைத் துய்த்து, மார்பு பற்றுக்கோடாகத் துயில்விப்பானாக. முழவொலி அறாத திருக்கோவலூர்க்குத் தலைவனாகிய, நெடிய தேரினையுடைய காரியின் கொடுங்கால் என்னும் ஊரினிடத்தே முன்றுறையில் உள்ள, அழகிய பெரிய பெண்ணையாற்றின் நுண்ணிய கருமணலை யொக்கும், நெளிந்த கரிய கூந்தலையுடைய என் மகட்கு, அறியாத் அவளைச் செலுத்திப்போம் துணைவன்.

# 8 - புறநானூறு

1. திணை – பொதுவியல்

துறை - பொருண்மொழிக் காஞ்சி

விளக்கம் – தமக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்க்குத் தேவைப்படும் பொழுது உதவி செய்தும், மிகுந்த அளவு பொருள் கொடுத்தும், ஆசிரியரிடம் பணிவோடு, வெறுப்பின்றி கல்வி கற்றல் நன்று. ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுள், அவர்களின் கல்விச் சிறப்புக்கேற்ப தாயின் மனநிலையும் மாறுபடும். ஒரே குடும்பத்தில் பிறந்த பலருள்ளும் “மூத்தவன் வருக” என்று கூறாமல் அறிவுடையவனையே அரசனும் தேடிச் செல்வான். வேறுபட்ட நான்கு குல்தாருள்ளும் (பிராமணர், சத்திரியர், சைவியர், சூத்திரர்) கீழ்க்குலத்தில் உள்ள ஒருவன் கல்வி கற்றவனாக இருந்தால், மேற்குலத்தில் உள்ள ஒருவன் அவனிடம் கல்வி கற்கச் செல்வான்.

2. திணை – பொதுவியல்

துறை - பொருண்மொழிக் காஞ்சி

விளக்கம் – பல நல்ல தன்மைகளை உடைய சான்றோர்களே! பல நல்ல தன்மைகளை உடைய சான்றோர்களே! கெண்டை மீனின் முள் போன்ற நரை முடியுடனும், முதுமையால் ஏற்படும் தோல் சுருக்கம் கொண்ட கன்னத்துடனும், பயன் இல்லாத முதுமையை அடைந்த பல நல்ல தன்மைகளை உடைய சாந்றோர்களே! கூர்மையான கோடரிப் படைக்கலன் கொண்டு மிகுதியான வலிமை கொண்ட காலன் கயிற்றால் பிணைத்து இழுத்துச் செல்லும் நேரத்தில் நீங்கள் வருந்துவீர்கள். நல்ல செயல்களைச் செய்யாவிட்டாலும், தீய செயல்கள் செய்வதைத் தவிர்க்கவும், அதுதான் எல்லாருக்கும் மகிழ்ச்சி அளிப்பது அதுமட்டுமல்லாமல், அதுதான் உங்களை நல்ல வழியில் செலுத்தும்.

## ஆ). பத்துப்பாட்டு

குறிஞ்சிப் பாட்டு

### தோழி அறத்தொடு நிற்றல்

என் தோழியாகிய தலைவி ஒளிதிகழ் முகம் கொண்டவள். தழைத்த கூந்தலை உடையவள். அவளது மேனியில் இருந்ததால் பெருமை பெற்றிருந்த அணிகலன்கள் இப்போது அவளை நெகிழச் செய்து கொண்டிருக்கின்றன. இது சாகடிக்காமல் சாகடித்துக் கொண்டிருக்கும் கொடிய நோய். இதற்கு என்ன காரணம் என்று தெருவில் உள்ளவர்களை யெல்லாம் கேட்கிறாய். அவர்களுக்கெல்லாம் என்ன தெரியும்? பல்வேறு உருவங்களில் காட்சி தரும் முருகக் கடவுள்தான் காரணம் என்று தெருவில் உள்ளவர்கள் சொல்லக் கேட்டு முருகனைத் தணிவிக்க அவனுக்கு விழா எடுக்கின்றாய். இனிக்கும் பொருள்களும், மணக்கும் பொருள்களும் படைக்கின்றாய் வேலனைக் கொண்டு இவளை ஓச்சுக்கின்றாய். அதனால் இவள் துன்புறுகிறாள். நீயும் துன்புறுகிறாய். இவளது துன்பத்தைத் தாங்க முடியாமல் நீ பித்தேறி மயங்குகிறாய்.

இவளது நல்லழகு தொலைந்துபோய் விட்டது. இனிக்கும் தோள்கள் இளைத்து விட்டன. 'புள்' என்பது பிறர் அறிந்து கொள்ளக்கூடிய குறிப்புகள். இவளது நிலையைப் பிறர் உணர்ந்து கொண்டனர். அன்றியும் தனிமையே இவளை வருத்துகிறது. அதனால் இவளுக்கு உட்சுரம். இந்த உட்காய்ச்சலோடு இவள் உயிர் வாழ்கிறாள். இவளுக்கு உய்தி தராத பெருந்துன்பம் இது. இவளால் அதனை வெளிப்படுத்த முடியவில்லை. நான் அவளை வற்புறுத்திக் கேட்டேன். அவள் என்னிடம் சொன்னாள் தலைவி தோழியிடம் சொன்னாள்.

### தலைவியின் அன்பு மிகுதி

முத்து, மணி, பொன் போன்றவற்றாலான அணிகலன்களை இழக்கலாம். தேடி ஈட்டினால் அவை மீண்டும் வந்து சேர்ந்துவிடும். சான்றாண்மை ஒழுக்கம், பிறர் வியக்கத்தக்க பெருமை, நல்லியல்பு ஆகியவை, குன்றிப்போனால் அவற்றை மீண்டும் தூக்கிப் புகழ்நிலையில் நிறுத்துதல் யாராலும் முடியாத பண்புகள். குற்றமற்ற மெய்யறிவுடைய ஐயர்க்கும் அது எளிதன்று என்று தொன்னெறி உணர்ந்த அறிஞர்கள் கூறுகின்றனர். அதனால் … தலைவி சொல்கிறாள்- ஆசையும், அறியாமையும் என்னிடம் ஓராங்கு காட்டி விளையாடிக் கொண்டிருக்கின்றன. என் தந்தை தேர்ப்படைத் தலைவன்.

அவனது கட்டுக் காவலை மீறி என்னவனும், நானுமாக மயங்கிய நிலையில் எங்களுக்குள் நிகழ்ந்த உடலுறவு இதுதான். இதைத் தாய்மாரிடம் சொல்லிவிட்டால் பழியும் உண்டோ – என்று தலைவி தன் தோழியிடம் சொன்னாள். அவள் சொன்னாள் என்று இப்போது தோழி தாயரிடம் கூறுகிறாள்.

ஊர் அறிய நடக்கும் திருமணம் அறமணம். இங்கு நடந்தது மறைமணம். இந்தப் புறவுலகத்துக்கு இது பொருந்தாவிட்டாலும் அந்த அகவுலகத்துக்கு பொருந்தும். வானோர் வாழ்த்துவர். தோழி தொடர்கிறாள். இப்படி அவள் (தலைவி) சொல்லும்போது மான் விரும்பும் அவளது மயக்கப் பார்வை கலங்கி விட்டது. வேறு வழி தெரியாமல் கையைப் பிணைந்துகொண்டாள். தாங்க முடியாத துன்பத்தோடு தேம்பித் தேம்பிச் சொன்னாள்.

### மணம் நிகழ்ந்தமையைத் தோழி அறிவித்தல்

இரு பெரு வேந்தர்கள் தங்களுக்குள் இருந்த கருத்து மாறுபாட்டினால் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒன்று சேர்க்க நினைத்த சான்றோர் போர்க்களத்துக்குச் சென்று அவர்களுக்கு அறிவுரை கூறும்போது எத்தகைய அச்சத்துடன் இருப்பாரோ அத்தகைய அச்சத்துடன் இருந்துகொண்டு என் உள்ளம் தாங்கிக்கொள்ள முடியாத உண்மையை உங்களிடம் (தாயரிடம்) சொல்கிறேன். – என்கிறாள் தோழி. உயர்ந்த பண்பு, ஒத்த குடிப்பிறப்பு, ஒத்த செல்வவளம், ஒத்த குலப்பிறப்பு, உதவும் துணைப்பாங்கு முதலானவற்றை யெல்லாம் பொருத்திப் பார்த்து மணமக்களைக் கூட்டுவிப்பது அக்கால வழக்கம். இவற்றில் எதையும் எண்ணிப் பார்க்காமல் நாங்களாகவே துணிந்து எங்களுடைய பாதுகாப்புக்காக மறைவில் மணம் செய்து கொண்டோம். அந்த மணம் எப்படி நிகழ்ந்தது என்பதை நீ நன்றாக உணருமாறு சொல்கிறேன். தாயே! பொறுத்தருள்க. எங்கள் மேல் சினம் கொள்ளாமல் கேட்டருள்க.

### தினைப்புனம் காத்த வகை

யானை விளைந்த மூங்கில் நெல்லைக் கசக்கித் தின்னும். அதன் முத்துப் போன்ற கொம்புகளுக்குக் கீழே அதன் கை தொங்கும். அந்தக் கையைப் போல தினை விளைந்திருந்தது. உவமை நலம்- விளைந்திருக்கும் தினைக்கதிர் யானையின் கைபோல் வளைந்திருக்கும். விளைந்த கதிருக்கு மேல் இரண்டு தினையிலைத் தோகைகள் நிமிர்ந்திருப்பது யானையின் தந்தங்கள் போல் இருக்கும். துதிக்கையிலுள்ள மடிப்புவளைவுகள் போல தினைக்கதிர் திட்டுத் திட்டாகக் காணப்படும்.

தினைக்கதிர்களை உண்ண வரும் பறவைகளை ஓட்டிக் கொண்டிருந்துவிட்டுப் பகல்பொழுது கழிந்த பின் வீடு திரும்புக – என்று சொல்லி எங்களை நீ அனுப்பி வைத்தாய்.

செழுமையான மரத்துண்டுகளைக் கொண்டு பரணிப்பந்தல் போடுபவன் தினைவயலில் பரணிப்பந்தல் அமைத்திருந்தான். மரமேறும் புலிகூட அதில் ஏற அஞ்சும் தகைமையது அந்தப் பரணிப்பந்தல். அதன்மேல் ஏறி இருந்துகொண்டு நாங்கள் கிளிகளை ஓட்டிக் கொண்டிருந்தோம். தழல், தட்டை, குளிர் போன்ற இசைக் கருவிகளைத் தட்டி ஒலி எழுப்பி ஓட்டிக் கொண்டிருந்தோம். அந்த நேரத்தில்…

**சுனையில் நீராடல்**

அள்ள அள்ளக் குறையாத கடலிலிருந்து மேகமானது நீரை முகந்துகொண்டு காற்றால் உந்தப்பட்டு வானில் மிதந்து அல்லாடிக்கொண்டிருந்தது. வீசிய பெருங்காற்றில் தள்ளாடிய பறவைகள் தம் இருப்பிடங்களுக்குச் சென்றுகொண்டிருந்தன. முரசு அதிர்வது போல் மேகங்கள் இனிமையாக முழங்கின. ஏராளமாகச் சென்ற மேகங்கள் ஒன்றோடொன்று தழுவிக்கொள்ளும்போது, முரசு முழக்கத்துடன் செல்லும் முருகனின் வேல் மின்னுவது போல மின்னல்கள் தோன்றின. அவை மலைமேல் மழையாகப் பொழிந்தன. மழைநீர் உச்சிமலையிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தது. அருவியில் அது இறங்கும்போது விரிந்தாடும் வெள்ளைத்துணி போல் காணப்பட்டது. அந்த அருவியில் நீங்காத ஆசையோடு கட்டுப்பாடின்றி நீராடிக்கொண்டிருந்தோம். பளிங்கு போன்ற அந்தச் சுனையில் மூழ்கு-நீச்சல் போட்டுக் கொண்டிருந்தோம்

கொட்டும் அருவியில் ஆடினோம். குட்டச் சுனையைக் குடைந்து விளையாடினோம். குளிர்ந்த மலையில் பாயும் நீரிலும் அங்குமிங்கும் பாய்ந்தோடினோம். ஈரம் கோத்துக்கொண்டு பின்னிக்கிடந்த எங்களது கூந்தலில் நீர்த்திவலைகள் சொட்டிக்கொண்டிருந்தன. அவை பொன்னிழையில் பதிக்கப்பட்டுள்ள மணிபோல் எங்களது கூந்தலிலிருந்து தோள்பக்கமாக விழுந்துகொண்டிருந்தன. அவற்றைப் பிழிந்து நாங்கள் உலர்த்திக் கொண்டிருந்தோம்.

**பூக்களைப் பறித்துப் பாறையில் குவித்தல்**

பூக்களைப் பறித்துவந்து குவித்து விளையாடுவது சங்ககால விளையாட்டுகளில் ஒன்று. குவித்த பூக்களைத் தலையில் சூடி ஒப்பனை செய்து கொள்ளுதல், மாலையாகக் கட்டி அணிந்து கொள்ளுதல், தழையோடு கூடிய பூக்களைக் கொண்டு தழையாடை

செய்து உடுத்திக் கொள்ளுதல் முதலானவையும் பூ விளையாட்டில் அடங்கும். தழையாடை என்பது உடுத்திக் கொண்டிருக்கும் நூலாடையின் மேல் ஒப்பனைக்காக அணிந்து கொள்ளும் அணியாடை. மழை பெய்து கழுவிய பாறையின்மேல் அவர்கள் குவித்த பூக்கள் இங்கு அகரவரிசையில் அடுக்கித் தரப்படுகின்றன. பூக்களின் எண்ணிக்கை இங்கு 99 என்று எண்ணிட்டுக் காட்டப்பட்டுள்ளது. நுண்ணறிவாளர்களின் எண்ணிக்கை கூடலாம் அல்லது குறையலாம். பாடலில் காணப்படும் அடுக்கு-முறை பின்வருமாறு உள்ளது. காந்தள், வள் இதழ் ஒண் செங் காந்தள், ஆம்பல், அனிச்சம், குவளை, தண் கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி, வேரி, செங் கொடு வேரி, தேமா, மணிச்சிகை, உந்தூழ், உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ், கூவிளம், எறுழம், எரி புரை எறுழம், சுள்ளி, கூவிரம், வடவனம், வாகை, குடசம், வான் பூங் குடசம், எருவை, செருவிளை, கருவிளை, மணிப் பூங் கருவிளை, பயினி, வானி, குரவம், பல் இணர்க் குரவம், பசும்பிடி, வகுளம், காயா, பல் இணர்க் காயா, 70 ஆவிரை, விரி மலர் ஆவிரை, வேரல், சூரல், பூளை, குரீஇப் பூளை, கண்ணி, குறுநறுங் கண்ணி, குருகிலை, மருதம், கோங்கம், விரி பூங் கோங்கம், போங்கம், திலகம், பாதிரி, தேங் கமழ் பாதிரி, செருந்தி, அதிரல், சண்பகம், பெருந் தண் சண்பகம், கரந்தை, குளவி, மா, கடி கமழ் கலி மா, தில்லை, பாலை, முல்லை, கல் இவர் முல்லை, குல்லை, பிடவம், சிறுமாரோடம், வாழை, வள்ளி, நெய்தல், நீள் நறு நெய்தல், தாழை, தளவம், தாமரை, முள் தாள் தாமரை, ஞாழல், மௌவல், கொகுடி, நறுந் தண் கொகுடி, சேடல், செம்மல், குரலி, சிறுசெங்குரலி, கோடல், கைதை, வழை, கொங்கு முதிர் நறு வழை, காஞ்சி, நெய்தல், மணிக் குலைக் கள் கமழ் நெய்தல், பாங்கர், மராஅம், தணக்கம், பல் பூந் தணக்கம், 85 ஈங்கை, இலவம், கொன்றை, தூங்கு இணர்க் கொன்றை, அடும்பு, ஆத்தி, அமர் ஆத்தி, அவரை, நெடுங் கொடி அவரை, பகன்றை, பலாசம், பிண்டி, பல் பூம் பிண்டி, வஞ்சி, பித்திகம், சிந்துவாரம், தும்பை, துழாஅய், தோன்றி, சுடர்ப் பூந் தோன்றி, நந்தி, நறவம், நாகம், நறும் புன்னாகம், பாரம், பீரம், குருக்கத்தி, பைங் குருக்கத்தி, ஆரம், காழ்வை, புன்னை, கடி இரும் புன்னை, நரந்தம், நாகம், இருள்நாறி, நள்ளிருள் நாறி, குருந்தம், மா இருங் குருந்தும், வேங்கையும், புழகு, அரக்கு விரித்தன்ன பரு ஏர்அம் புழகுடன்,

### தழை உடுத்து, மாலை சூடி, அசோகின் நிழலில் இருத்தல்

கூறப்பட்ட (99) வகைவகையான பூக்களைப் பாறையில் குவித்தோம். மழைநீர் பெய்து கழுவிய பாறைமேல் குவித்தோம். அந்தப் பூக்களின் மேல் எங்களுக்குக் கொள்ளை ஆசை [மால்]. தினைப்புனத்தில் பறவைகளின் ஒலி. நாங்களும் அவ்வப்போது பெரிய உயிர்ப்புக்குரல் கொடுத்துப் பறவைகளை ஓட்டினோம். எங்கள் குரலொலி மலையில் சிலம்பி எதிரொலித்தது.

தினைக்கதிர்களைக் கவர வரும் கிளிகளை ஓட்டிக் கொண்டிருந்தோம். செடிகொடிகளைத் தளிரோடு பறித்துத் தழையாடையாக்கி இடுப்பாடை மறைய உடுத்திக் கொண்டோம். குவித்த பூக்களால் பல்வேறு வகையான மாலைகள் தொடுத்து அணிந்துகொண்டோம். பின்னிய கூந்தலும், உச்சிக் கொண்டையும் அழகு பெறுமாறு பூக்களைச் சூடிக்கொண்டோம். அங்கே, அசோகமரம் எரியும் தீயைப்போல் பூத்திருந்தது. அப்பூக்கள் உதிர்ந்து சிவப்புக் கம்பளம் விரிந்தது போல் இருந்த அதன் மரத்தடியில் நிழலுக்காகத் தங்கியிருந்தோம்.

### தலைவனது வருகை

ஒருவன் வந்தவன் - அவன் தலைமயிர் சுருண்டிருந்தது. எண்ணெய் தடவிப் பளபளப்பாக இருந்தது. வயிரம் பாய்ந்த தகரக் கட்டையிலிருந்து வடித்தெடுத்த செண்டை மணம் கமழும்படி தடவியிருந்தான். மழையால் ஈரமாயிருந்த தலைமயிரை விரல்களை விட்டுப் பிரித்து உலர்த்திக் கொண்டிருந்தான். புகையும் அகில்கட்டையும் ஈரத்தைப் புலர்த்தின. அதன் மணத்தில் மயங்கிப் பொறிவண்டுகள் ஒலித்துக்கொண்டு அவனது குஞ்சியைச் சூழ்ந்து சுழன்று கொண்டிருந்தன. மணக்கும் மலர்க்கண்ணித் தொடையல் அவன் சென்னியை அழகுறுத்திக் கொண்டிருந்தது. தொடையலில் இருந்த பூக்கள் மலையிலும், நிலத்திலும் பூத்தவை. சினையிலும், சுனையிலும் பூத்தவை. ஆராய்ந்து பொறுக்கியெடுத்த பல்வேறு வண்ணம் கொண்டவை. அவன் மார்பில் வைரமாலையுடன் பூவிதழ்களாலான பித்திகைத் தொடையலும் தொங்கியது. ஒருபக்கம் காதோரத்தில் தலையொப்பனையாக அசோகப்பூவைச் செருகியிருந்தான். மலைக்குவடுபோல் நிமிர்ந்திருந்த அவன் நெஞ்சு தளிர் போன்று தளதளப்பாகவும் இருந்தது. மார்பில் சந்தனம் பூசியிருந்தான். மார்பின் அகலம் வலிமையும் விம்மித ஏற்றத்தன்மையும் கொண்டு மலர்ந்திருந்தது. அகலத்தில் பூண்மாலையும், பூமாலையும் பொலிந்தன. செம்மாந்து உயர்ந்த தோளோடு சேர்ந்த கைகளில் எய்யும் அம்போடு வரிந்துள்ள வில் இருந்தது.

உடுத்தியிருந்த ஆடை நழுவாமல் இருக்க வேலைப்பாடுகள் கொண்ட கச்சை அணிந்திருந்தான்.

**தலைவனுடன் வந்த நாய்க்குத் தோழி முதலியோர் அஞ்சி வேறிடம் செல்லுதல்**

அவன் ஈகைக்கழலில் வாகை நடை போட்டு நடந்துவதான். அவனது கால்களில் கழல். அது அவனது உயர்ந்த கொடைத்திறனின் அடையாளச் சின்னம். நடந்து வரும்போது அதில் ஒரு பொலிவு. போரில் பகைவரைப் பாழாக்கும் திறப்பகட்டும் அதில் தென்பட்டது. அவனைச் சூழ்ந்து இளைஞர்கள் வந்து கொண்டிருந்தனர். பகைவரைப் புறங்கண்ட வேலுடன் அவர்கள் காணப்பட்டனர். அவன் இப்போது வேட்டைக்கு வந்துகொண்டிருந்தான். வேட்டை வாய்க்காததால் மகிழ்ச்சியில்லாத கண்களோடு வேட்டைநாய்கள் பல் தெரிய அவனைச் சூழ்ந்து வந்தன.

**தலைவன் மகளிரிடம் கெடுதி வினாவுதல்**

அவன் பசுவைப் பார்த்த காளை ஆனான். அவனைப் பார்த்ததும் நாங்கள் நடுங்கினோம். எழுந்து நடக்க முடியாமல் தள்ளாடினோம். நெஞ்சு படபடத்தது. மிரண்டு பார்த்துக்கொண்டே வேறிடம் நோக்கி நகர்ந்தோம். அவன் நிலையோ மாறுபட்டிருந்தது. விரும்பத்தக்க இனிய நிலத்தில் பசுவைக்கண்ட காளைபோல அவன் நெருங்கி வந்தான். நாங்கள் திண்டாடி மருள்வதைப் பார்த்து அவன் அஞ்சினான்.

கெடுதி செய்துவிட்டேன் போலும் – என்றான் மென்மை, இனிமை, விருப்பம் மூன்றும் கலந்து அவன் பேசினான். தலைவி கூந்தலின் ஒப்பனையழகைப் பாராட்டினான். ஒளிரும் வளையலும், ஒய்யாரமாக அசையும் மேனியழகும், அழகால் வளைந்து குழிந்த உந்தியும், மடமைத் திமிரி மழைபோல் ஈரப்பார்வை தரும் கண்களும் கொண்ட இளமான்களே! – என்று அழைத்தான். வரம்பு கடந்த கெடுதி செய்துவிட்டேன் போலும் – என்றான். அவன் சொல்லுக்கு நாங்கள் மறுமொழி கூறவில்லை. எனவே அவன் அல்லாந்தான், துன்புற்றான், கலங்கினான்.

**தலைவன் தலைவியின் சொல்லை எதிர் பார்த்து நிற்றல்**

பேசக்கூடாதா?. மென்மைத்தன்மை உள்ளவர்களே! கெடுதியை விடுவித்துச் சொல்லாவிட்டாலும் வாய்ச்சொல் தரலாமே. பேசினால் உங்களுக்குத் தீங்கு நேர்ந்துவிடுமோ? – என்றான் அவன் என் சொல்லுக்காக காத்துக்கொண்டு நின்றான். பாலையாழில் நைவளப்பண்ணை மீட்டவல்லவன் அவன். காதல் கொண்ட வண்டினமும்,

சுரும்பினமும் விரும்பி அமர்ந்திருக்கும் பூங்கொத்துள்ள சிறுகிளை ஒன்றை ஒடித்துத் தன்னைச் சூழ்ந்து வரும் நாய்களை ஓட்டினான். களிறு மரக்கொம்புகளை ஒடித்து மதம் ஒழுகும் தன் காதோரத்தில் மொய்க்கும் வண்டுகளை ஓட்டுவது போல ஓட்டினான். தலைவியின் சொல்லுக்காகக் காத்துக்கொண்டு நின்றான். காதலில் மயங்கி வரும் யானைபோல் தலைவியின் முன் வந்தான்.

**யானை சினத்துடன் புனத்திற்கு வர, மகளிர் நடுங்கியமை**

அப்போது, மதம் கொண்ட ஆண்யானை ஒன்று சிங்கம் போல அங்கு வந்தது. கதிர் அறுத்தபின் உள்ள தினைத்தட்டைப் புல்லை அறுத்து வேயப்பட்ட குடிசை. அதன் தலைவி மனையோள். மானைப்போல் மருண்டு பார்த்துக் கொண்டே தன் கணவனுக்குத் தேனில் பிழிந்தெடுத்த தேறல் கள்ளை ஊரெல்லாம் உறங்கும் நேரத்தில் ஊட்டிவிட்டாள். உண்ட அவன் யானைக் காவலுக்குச் சென்றான். பாம்பு போல் வளைந்த வில்லுடன் சென்றான். யானை விளைச்சலைப் பாழாக்குவது அவன் நெஞ்சை நோகச் செய்தது. அதனால் உரத்திலும், உடலிலும் தோன்றிய சினச் செருக்குடன் அம்பெய்யப் புடைத்துக் கொண்டும், வீளையொலி எழுப்பிக் கொண்டும், வெடி போட்டு முழக்கம் செய்து கொண்டும் காடெல்லாம் கலங்கும்படி சென்றான். மழை பெய்ய உருமும் இடிபோல் வெடி முழக்கம் கேட்ட யானை பிளிறிற்று. மதம் பிடித்தது போல் தன் கையை நிலத்தில் போட்டு மரங்களை அடியோடு சாய்த்தது. இரவு வேளையில் வெடி சத்தம் கேட்டு மருண்டு போயிருந்த யானை அப்போது பகல் வேளையில் மடங்கல் சிங்கத்தைக் கண்டு மேலும் மருண்டுபோய் அதனை எதிர்த்துத் தாக்கும் நிலையினதாய் அவளும் அவனும் இருக்கும் இடத்துக்கு ஓடி வந்தது. தினைப்புனம் காக்கும் பணியில் இளைஞர்களும், இளம்பெண்களும் ஈடுபடுவது வழக்கம். மகளிர் தினைக்கதிர்களைக் கவரவரும் பறவைகளை ஓட்டுவர். காளையர் அதனைக் கவரவரும் விலங்குகளை ஓட்டுவர். இப்பகுதியில் விலங்குகளை ஓட்ட வேட்டையாடிக்கொண்டு வரும் காளையர் பேசப்படுகின்றனர்.

முருகன்-வள்ளி கதை - முளைத்த வரலாறு. யானையைக் கண்டதும் பயந்து ஓடினோம். தப்பிக்கும் இடம் தெரியவில்லை. வளையல் குலுங்கி ஒலிக்கும்படி ‘ஒய்’ என்று கூவிக்கொண்டு ஓடினோம். நாணம் மறந்துபோய் விட்டது. நெஞ்சம் படபடத்தது. அவனை அணைத்துக்கொண்டு தலைவி நடுங்கினாள். மழைமேகத்தைக் கண்டால் மயில் ஆடுமல்லவா. அப்படி மழைமேகப்பேய் பிடித்த மயில்போல் நடுங்கினாள்.

**யானையைத் தலைவன் அம்பு எய்து துரத்துதல்**

அவன் யானை முகத்தில் அம்பு எய்தான் - நீண்ட கோலில் விண்மீன்போல் முனையுள்ள அம்பைக் கடுவிசையோடு அவன் எய்தான். களிற்றின் அழகிய முகத்தில் அது பாய்ந்தது. அப்புண்ணிலிருந்து குருதி பாய்ந்து ஒழுகியது. அதன் நெற்றியிலிருந்த புள்ளிகளும், வரிக்கோடுகளும் சிதைந்தன. அயர்ந்து போன அந்த ஆண்யானை அங்கே நிற்காமல் திரும்பி ஓடிவிட்டது. உடனே நாங்கள் முருகனுக்கு வெறியாடும் களத்தில் மகளிர் கைகோத்துக் கொண்டு ஆடுவதுபோல் கைகோத்துக் கொண்டோம். கை கோத்துக்கொண்டிருந்த நாங்கள் நுரைத்துக்கொண்டு வரும் வெள்ளத்தில் பாய்ந்தோம் - முருகனுக்கு வெறியாடுவோர் கடப்பம்பூ மாலையை அணிந்திருப்பர். அந்த மாலை நெருக்கமாகப் பிணிக்கப் பட்டிருப்பது போல் நாங்கள் எங்களுடைய கைகளை ஒருவருக்கொருவர் இறுக்கிப் பிடித்துக்கொண்டு நுரைத்துக்கொண்டு வரும் வெள்ளத்தில் பாய்ந்தோம். வெள்ளம் அரிக்கும்போது கரையோர வாழைமரம் ஆடுவது போல அப்போது தலைவி நடுங்கினாள்.

அவன் அவளை வெள்ளத்திலிருந்து தூக்கிக்கொண்டு கரைக்கு வந்தான். அவன் பெருந்தகையாளன். அழகே! அசையாதே. எதற்கும் அஞ்சாதே. உன் அழகை நான் சுவைக்க வேண்டும் – என்றான். வந்தான். அவளது நெற்றியைத் தடவிக்கொடுத்தான். ஏதோ நெடுநேரம் எண்ணிப்பார்த்தான். என்னைப் பார்த்தான். ஒரு சிரிப்பு சிரித்துவிட்டன். அவளை அவன் நுகர நான் விலகிக்கொள்ளவேண்டும் என்பது அந்தச் சிரிப்பின் பொருள்.

**தலைவி தலைவனுடன் கூடிய நிலை**

நாணமும், அச்சமும் கொண்டு நான் பிரிந்துவிட்டேன். அது மயிலாடும் பாறை. சுனையில் பலாப்பழத் தேன் ஒழுகியது. அச்சமும் நாணமும் ஓடிப்போக வேண்டிய இடத்துக்கு ஓடிப் போய்விட்டன. 'ஒய்' என்று அவள் நெஞ்சை அவன் தன் நெஞ்சில் அணைத்துத் தழுவிக்கொண்டான். அவள் பிரிய முயன்றாள். அவன் விடவில்லை. பழுத்த மிளகு உதிர்ந்து கிடந்த பாறை. பக்கத்தில் நீண்ட சுனை. அதில் முழு மாம்பழம் ஒன்று விழுந்தது. உள்ளுறை - சுனை – பெண்ணுறுப்பு, மிளகு – பெண்ணுறுப்பில் உள்ள பருப்பு, மாம்பழம் – ஆண் விந்து. பக்கத்து மரத்தில் பழுத்திருந்த பலாப்பழத்தில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அதிலிருந்து பலாத்தேன் சுனையில் ஒழுகியது. அதைத் தண்ணீர் என்று கருதி மயில் பருகியது. மயங்கி ஆடியது. உள்ளுறை - பலாத்தேன் –

அவள் உறுப்பின் ஊறல், மயில் – தலைவி, மயக்கம் – கலவி மயக்கம். ஊரிலே திருவிழா. கயிற்றில் ஏறிப் பெண் ஆடினாள். உறுமுதலும் தட்டலும் கேட்கும் மேளத்தின் பாணிக்கேற்ப ஆடினாள். இந்த ஆடுமகள் கயிற்றின்மேல் ஏறி ஆடுவதுபோல் மயில் மரக்கிளையில் ஏறி ஆடியது. மலையில் வாழும் அரம்பையர் போல் சாயல் கொண்டவை அந்த மயில்கள். உள்ளூறை - கயிறூர் பாணி – அவர்கள் மோதி விளையாடியது.

தலைவியைத் தழுவிய தலைவன் யார்? குன்றுகள் நிறைந்த நாட்டுக்குத் தலைவன். எல்லாரும் விரும்பும் பெருமையும் பீடும் உடையவன். அவன் மலையுச்சியில் காந்தள் மலர்ந்திருக்கும். அவை உதிர்ந்து கிடக்கும் பரப்பில் புதியதோர் மணம் கமழும். இப்படிப்பட்ட நிலப்பரப்புகள் கொண்ட நாட்டுக்குத் தலைவன்.

ஊரறியத் திருமணம் செய்துகொள்வேன், இல்லறத்தில் விருந்தோம்பல் என்னும் தெப்பத்தில் ஏறி இன்பமாகச் செல்லலாம் - என்றான். எங்களுடைய உள்ளக் கிடக்கையை அவன் படித்தான். எங்களைத் தேற்றினான். என்ன சொல்லித் தேற்றினான்? திருமண விழாவை ஊர்த்திருவிழாவாக நடத்துவேன். மிடாமிடாவாய்ச் சமைத்த சோற்றை வந்தவர்க்கெல்லாம் வழங்குவேன். திருமண வளநகர் (வளமனை) ஊரார் எல்லாருக்கும் திறந்திருக்கும். அதற்குள் எல்லாரும் தடையின்றி நுழையலாம். வந்தவர்களுக்கெல்லாம் புலவுச்சோறு. (பிரியா1ணி) அதில் நெய்யும் ஒழுகும். குடும்பத்தைச் சேர்ந்த உற்றார் உறவினர்களும் விருந்தினரோடு விருந்து உண்பர். அவர்கள் உண்டபின் மீதம் இருப்பதைப் பிணைந்து கவளமாக உன்னோடு சேர்ந்து நான் உண்பது எனக்குப் பெருமை தரும் செயல். இல்வாழ்க்கை நீரோட்டத்தில் விருந்தோம்பல் என்னும் அறநெறிப் புணையில் ஏறிக்கொண்டு நாம் இன்பமாகச் செல்வோம் – என்று தேற்றினான்.

அறப்புணையில் செல்லலாம் என்று சொல்லித் தேற்றியபின் அதனை உறுதிப்படுத்துவானாய் மலைத்தெய்வம் முருகன் பெயரைச்சொல்லி முருகனையும் என்னையும் வாழ்த்தினான். அவனையும் என்னையும் தொழுதான். சொன்னசொல் தவறமாட்டேன் என்று வஞ்சினம் கூறினான். அதனை என் நெஞ்சம் விரும்பியது. துன்பம் இன்பமாக மாறியது. யானை தந்த புணர்ச்சி இது. வானம் எங்களுக்கு ஆடையாயிற்று. மயங்கியவர்கள் விரும்பும் பூஞ்சோலையில் அன்றைய பகல் பொழுதை அவனோடு கழித்தேன். ஞாயிறு மேலைமலையில் மறைந்தது.

பொழுது போனபின் இரவும் பகலும் மால்-மயங்கம் கொள்ளும் மாலைக்காலம் வந்தது. மான்கூட்டம் மரத்தடியில் படுத்துக்கொண்டு அசைபோட்டது. பசுக்கள்

கன்றுகளுக்காகக் கனைத்துக்கொண்டே மன்று திரும்பின. அன்றில்கள் பெண்ணைமரத்தில் இருந்துகொண்டு அகவின. அக்குரல் கொம்பூதுவது போல் இருந்தது. பாம்புகள் வெளிச்சத்துக்காக மணியைக் ககக்கின. (நம்பிக்கை) கோவலர் ஆம்பல்கொடியில் செய்த புல்லாங்குழலை ஊதிக்கொண்டும், இடையிடையே தம் ஆனிரைகளைத் தெளிவாகப் பெயர்சொல்லி விளித்து அவற்றை விரைந்து செல்லுமாறு தூண்டிப் பயிற்றுவித்துக் கொண்டும் சென்றனர். ஆம்பல் பூவின் போது விரியத் தொடங்கியது. வளமனைகளில் வாழும் மகளிர் விளக்கேற்றித் தூண்டி விடலாயினர். அந்தணர்கள் அந்தி வேளையைத் தொழும் விழாவினைக் கொண்டாடிக்கொண்டிருந்தனர்.

மலைவயல்களில் பணவை என்னும் பந்தலின் மேல் ஏறி இருந்துகொண்டு கானவர் பயிரை அழிக்கவரும் விலங்குகளை அச்சுறுத்துவதற்காக ஞெகிழி என்னும் தீப்பந்தத்தை ஏற்றினர். வானம் கறுத்தது. புள்ளினங்கள் ‘கல்’லென ஒலித்துக்கொண்டு இருப்பிடம்நோக்கி வானமெங்கும் பறந்து சென்றன. அது சினங்கொண்ட வேந்தன் போர் முடிந்தபின் வீடு திரும்புவது போல இருந்தது.

**தலைவன் பெயர்ந்த நிலை**

நாடறியும் திருமணம் - நெருக்கமாகக் கட்டிய மாலையைப் போட்டு உன் பெற்றோர்கள் உன் முன்கைகளைப் பற்றி எனக்குத் தர நான் நாடறியும் நல்ல திருமணம் செய்துகொள்ளும் விழா எடுப்பேன். சிலநாள் கலங்காதிருப்பாயாக – என்றான். அன்பு மொழிகள் அனைத்தையும் சொன்னான். பசுவுக்குத் துணையாக வரும் காளைபோல் என்னுடன் வந்தான். ஊருக்குள் நுழையும் வாயில் வரையில் வந்தான். ஊரில் மாலைக்காலத்து முழவொலி கேட்டது. அங்கே என்னை நிறுத்திவிட்டுத் திரும்பிவிட்டான். அன்றுமுதல்

**தலைவன் வரும் வழியின் அருமை நினைந்து, தலைவி கலங்குதல்**

அன்று முதல் இரவில் வருதல் அவனுக்கு வழக்கமாயிற்று - பின்னர், நாள்தோறும் இரவில் வந்து கெஞ்சினான் அன்று என்னை அடைந்த அதே ஆவலோடு ஒவ்வொரு நாளும் என்னிடம் வந்து என்னைத் தனக்குத் தரும்படி கெஞ்சினான். மாலைபோல் தொடர்ந்து நெருங்கிக் கேட்டான்.

தடைகள் நேர்ந்து இவள் இன்பம் கிடைக்காவிட்டால் சலிப்பில் சினம் கோள்ளமாட்டான் - ஊர்க்காவலர் விரைந்து வரினும், புதியவனாகிய இவனைக் கண்டு சினந்து நாய் குரைப்பினும், அன்னையாகிய நீ துயில் எழுந்துவிடாலும், நடமாடுபவர்

தெளிவாகத் தெரியும்படி நிலாவெளிச்சம் காய்ந்தாலும் அவன் இவளை அடைவதற்குத் தடையாக இருக்கும். இவளோடு இன்பத் துயில் கொள்ளும் வாய்ப்பு கிட்டாமல் போகும். அப்போதெல்லாம் அதற்காக அவன் சினம் கொள்ளமாட்டான்.

அவன் அழவில்லை இவள் அழுகிறாள் - அவன் இளமை மாறாதவன், வளமை குறையாதவன், தன் தகைமையிலிருந்து நழுவாதவன், சும்மாக் கிடக்கும் ஊரில் இப்படி மாய நிகழ்வுகள் நடக்கத்தான் செய்யும் என்பதனை நன்கு உணர்ந்தவன். இந்நிகழ்வுகளை வெறுக்காமல் இவளைப் போற்றுவான். மலரை அடிக்கும் மழைநீர் போன்றவை அவை என்று எண்ணிக்கொள்வான். அவன் அப்படி, இவள் எப்படி? இவளது கண்ணில் ஈரம், பெருகிய மதமதப்பு. அது மழையாக மாறியது. அவள் மார்பகத்தில் அரிக்கும் பனியாகிப் பொழிந்தது. வலையில் பட்ட மயில்போல் மேனியழகு குன்றி வதங்குகிறாள். நினைக்கும் போதெல்லாம் திரும்மத் திரும்ப அழுகிறாள்.

**இரவில் தலைவன் வரும் வழியின் அருமை**

இவள் கலங்குவதெல்லால் அவன் வரும் வழியில் இடர்ப்பாடுகள் உள்ளனவே என்பதுதான். குகையில் பதுங்கும் புலி, சிங்கம், கரடி, முட்டித் தள்ளும் கொம்புகளையுடைய காட்டாட்டுக் கடா, எதிர்த்துப் போரிடும் ஆண்யானை போன்றவற்றைத் தாக்கி அழிக்கும் வெஞ்சினம் அவனுக்கு இருந்தது. என்றாலும் இடி, பேய், இரை தேடும் மலைப்பாம்பு ஆகியவற்றிற்கு அவன் என் செய்வான்? நீர்க்குழிகள், நீர்ச்சுழிகள், அவற்றில் இரைதேடும் முதலை, இடங்கர், கராம் முதலான முதலையினத்துக்கு அவன் என்ன செய்வான்? – என்று கலங்குகிறாள்.

அவனுக்கு நேரக்கூடிய மேலும் பல இடர்ப்பாடுகளை எண்ணி இவள் கலங்குகிறாள். வழிப்பறி செய்வோர் பதுங்கும் இடம், வழுக்கு நிலம், கால் போன போக்கில் சென்று வழியின்றி முட்டிக்கொள்ளும் இடங்கள், பேய், மலைப்பாம்பு, போன்றவை உளப்படப் பிறவற்றால் நேரும் வழித்துன்பங்களும் மலை பிளந்திருக்கும் பாதையில் உண்டாயிற்றே என்று கலங்குகிறாள். எனவே இவளை அவனுக்கு ஊரறிய திருமணம் செய்துவைத்துச் சேர்த்துவைக்க வேண்டும் - என்று தாயரிடம் தோழி அறத்தொடு நிற்கிறாள்.

பார்வை வினாக்கள்

*சிறு வினாக்கள்: (2 மதிப்பெண்கள்)*

1. ”நல்லாற்றுப் படூஉ நெறி” எதுவென புறநானூறு குறிப்பிடுகிறது?
2. செல்வக்கடுங்கோ வாழியாதனின் நாள்மகிழ் இருக்கைச் சிறப்பை சுருக்கி வரைக.
3. ”சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே” இடம் சுட்டி பொருள் விளக்குக.
4. பரத்தை கூற்றாய் வரும் குறுந்தொகைப் பாடலின் கருத்தை விளக்குக.
5. ஐங்குறுநூறு கூறும் தோழி கூற்றை எடுத்துரைக்க
6. நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று இடம் சுட்டி விளக்குக

*பெருவினாக்கள்: (6 மதிப்பெண்கள்)*

1. பரிபாடல் சுட்டும் வையையின் சிறப்புகளை எடுத்துரைக்க.
2. குறிஞ்சிப்பாட்டு சுட்டும் பழந்தமிழரின் அகவொழுக்கத்தை விவரி.
3. கலித்தொகை கூறும்தலைவி கூற்றை விளக்கியுரைக்க..
4. பரிபாடல் குறிப்பிடும் வையை பற்றிய செய்தியை எடுத்துரைக்க.

1. நற்றிணை பாடல்களின் அடிவரையறை எத்தனை?.

(அ). 9-12 (ஆ). 4-8 (இ). 3-5 (ஈ). 12-31

2. ‘பழனம்’ என்பதன் பொருள் ____________.

(அ). காடு (ஆ). மலை (இ). வயல் (ஈ). கடல்

3. சேரர்களின் வரலாற்றைக் கூறும் நூல் எது?.

(அ). புறநானூறு (ஆ). குறுந்தொகை (இ). கலித்தொகை (ஈ). பதிற்றுப்பத்து

4. ‘வேய்’ என்பதன் பொருள் ____________.

(அ). மாமரம் (ஆ). மூங்கில் (இ). புன்னைமரம் (ஈ). பலாமரம்

5. குறுந்தொகையின் அடிவரையறை எத்தனை?.

(அ). 9-12 (ஆ). 4-8 (இ). 3-5 (ஈ). 12-31

6. ‘நேமியான்’ என்பது யாரைக் குறிக்கும்?.

(அ). இந்திரன் (ஆ). சிவன் (இ). பிரம்மன் (ஈ). திருமால்

7. பரிபாடலில் வையை பற்றிய பாடல்கள் எத்தனை?

(அ). 9 (ஆ). 8 (இ). 5 (ஈ). 12

8. ‘எல்’ என்பதன் பொருள் ____________.

(அ). இரவு (ஆ). பகல் (இ). நடுஇரவு (ஈ). கார்காலம்

9. பொதியல் முனிவன் யார்?

(அ). அகத்தியன் (ஆ). சேந்தன் பூதன் (இ). கௌதமன் (ஈ). வசிஷ்டர்

10. எட்டுத்தொகையில் அடிவரையறை குறைந்த நூல் எது?.

(அ). நற்றிணை (ஆ).குறுந்தொகை (இ). ஐங்குறுநூறு (ஈ).பதிற்றுப்பத்து

11. “ நின்ற சொல்லர் நீடு தோன்று இனியர்”- யாரைச் சுட்டுகிறது?

(அ) தலைவி (ஆ) தோழி (இ) நற்றாய் (ஈ) செவிலித்தாய்

12. ஐங்குறுநூற்றின் அடிவரையறை எத்தனை?

(அ) 4-8 (ஆ) 3-6 (இ) 9-12 (ஈ) 5-10

13. “கழனி” என்பதன் பொருள் யாது?

(அ) வயல் (ஆ) காடு (இ) மலை (ஈ) கடல்

14. “ தாய் சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு” யார் கூற்று?

(அ) செவிலித்தாய் (ஆ) நற்றாய் (இ) தலைவி (ஈ) தோழி

15. “ பரி” என்பதன் பொருள் குறிப்பிடுக.

(அ) ஆடு (ஆ) மாடு (இ) குதிரை (ஈ) யானை

16. பரிபாடலில் உள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?

(அ) 40 (ஆ) 50 (இ) 60 (ஈ) 70

17. கலித்தொகையில் உள்ள நெய்தற்கலிப் பாடல்கள் எத்தனை?

(அ) 22 (ஆ) 33 (இ) 44 (ஈ) 55

18. நெடுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது?

(அ) அகநானூறு (ஆ) புறநானூறு (இ) நற்றிணை (ஈ) குறுந்தொகை

19. "பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்ற பாடலடி இடம்பெறும் நூல் எது?

(அ) நற்றிணை (ஆ) அகநானூறு (இ) குறுந்தொகை (ஈ) புறநானூறு

20. குறிஞ்சிப் பாட்டு நூலின் ஆசிரியர் யார்?

(அ) நக்கீரர் (ஆ) அம்மூவனார் (இ) பூரிக்கோ (ஈ) கபிலர்

21. அழிசி என்ற மன்னனைக் குறிப்பிடும் நூல்?

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) கலித்தொகை ஈ) ஐங்குறுநூறு

22. ஆடிப்பாவையை உவமையாகக் கூறும் நூல்?

(அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) கலித்தொகை ஈ) ஐங்குறுநூறு

23. களவன் என்பதன் பொருள் என்ன?

(அ). முதலை (ஆ). ஆமை (இ). குரங்கு (ஈ). நண்டு

24. 'பதிற்றுப்பத்தில் செல்வகடுங்கோ வாழியாதனைப் பாடிய புலவர்?

(அ). ஔவையார் (ஆ). கபிலர் (இ). அம்மூவனார் (ஈ).நச்செள்ளையார்

25. பரிபாடலில் முருக கடவுளைப் பற்றிய பாடல்கள் எத்தணை? .

(அ). 8 (ஆ). 6 (இ).12 (ஈ). 4

26. கலித்தொகையின் நெய்தல் திணைப் பாடலைப் பாடியவர்?

(அ).நல்லுருத்திரன் (ஆ). நல்லந்துவனார் (இ). கபிலர் (ஈ). மருதனிளநாகன்

27. 2,8,12,18 என்ற எண்ணுள்ள அகநானூற்றுப் பாடல்கள் எத்திணைக்குரியது?

(அ).குறிஞ்சி (ஆ). முல்லை (இ). நெய்தல் (ஈ). பாலை

28. கீழ்பாலொருவன் கற்பின் மேற்பாலொருவன் அவன்கண்படுமே – இவ்வரிகள் இடம்பெருவது.

(அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) புறநானூறுஈ) ஐங்குறுநூறு

29. பௌவம் என்பதன் பொருள்?

(அ). பாம்பு (ஆ). பறவை (இ). கடல் (ஈ). உலகம்

30. எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவதாக அமைவது-------

(அ) குறுந்தொகை (ஆ) நற்றிணை(இ) அகநானூறு (ஈ) பரிபாடல்

31. ஞாலம் என்பதன் பொருள்

(அ) மழை (ஆ).செல்வம் (இ). உலகம் (ஈ). புகழ்

32. குறுந்தொகை நூலைத் தொகுத்தவர்----

(அ)ஆலங்குடிவங்கனார் (ஆ) பூரிக்கோ (இ). கபிலர் (ஈ). ஓரம்போகியார்

33.அகநானூறு --- என்றும் அழைக்கப்படுகிறது.

(அ) நெடுந்தொகை (ஆ). குறுந்தொகை (இ). அகநானூறு (ஈ) புறநானூறு

34. செவ்வேள் என்று சுட்டப்பெறும் தெய்வம்

(அ) திருமால் (ஆ). முருகன் (இ). சூரியன் (ஈ). சந்திரன்

35. புறம் பற்றிய ---- பாடல்களைக் கொண்டது புறநானூறு

(அ). 400 (ஆ). 300 (இ). 200 (ஈ). 100

36. .மாரி என்ற சொல்லின் பொருள்------.

(அ) மழை (ஆ).செல்வம் (இ). அருள் (ஈ). புகழ்

37. பன்னாடு தந்த மாறன் வழுதி தொகுப்பித்த நூல் எது?

அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) கலித்தொகை

38. 'பழன வாளை கதூஉம் ஊரன்' – எந்நிலத்தைச் சார்ந்தவன்?

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

39. பிள்ளையை ஈன்று தாய் இறக்கும் உயிரினம் எது?

அ) முதலை ஆ) பாம்பு இ) நண்டு ஈ) வண்டு

40. புதல் சூழ் பறவை என்பது எது?

அ) மயில் ஆ) காடை இ) புறா ஈ) கிளி

41. முருகப்பெருமானின் பிறப்பினைப் பற்றிக் கூறும் நூல் எது?

அ) ஐங்குறுநூறு ஆ) குறுந்தொகை இ) பதிற்றுப்பத்து ஈ) பரிபாடல்

42. மடலேறுதல் பற்றி குறிப்பிடும் நூல் எது?

அ) பதிற்றுப்பத்து ஆ) கலித்தொகை இ) அகநானூறு ஈ) புறநானூறு

43. அகநானூற்றில் மருதத்திணைப் பாடல்கள் எந்த எண்களைக் கொண்டவை?

அ) 1,3,5,7,9 ஆ) 4,14,24,34 இ) 6,16,26,36 ஈ) 10,20,30,40

44 .பல்சான்றீரே! பல்சான்றீரே!பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நற்றிணை ஈ) பரிபாடல்

45. ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தும் பொருட்டுப் பாடப்பட்ட நூல் எது?

அ) முல்லைப்பாட்டு ஆ) குறிஞ்சிப்பாட்டு இ) பட்டினப்பாலை ஈ) நெடுநல்வாடை

## UNIT-III

## SYLLABUS

| |
|---|
| **அலகு - III : காப்பியம் : காப்பியம் குறித்த அறிமுகம்**, **சிலப்பதிகாரம், மணிமேகலை** |

### அ) சிலப்பதிகாரம்:

**மங்கல வாழ்த்துப் பாடல்:** பொதியில் ஆயினும் – 'கோவலன் என்பான் மன்னோ' (14-38), 'நீல விதானத்து' – 'நோன்பு என்னை'(48-53).

**மனையறம் படுத்த காதை** : 'வார் ஒலி கூந்தலை', 'சிறப்பின் கண்ணகி தனக்கு என்' (84-90)

**அரங்கேற்றுகாதை :** 'மாமலர் நெடுங்கண்' - 'அகம் மறந்து' (170-175).

**மதுரைக்காண்டம்** : கொலைக்களக் காதை : 'இருமுது குரவர்'. 'எழுந்தனன் யான்' (67-83), 'வினை விளை காலம்' - ' கொணர்க ஈங்கு என' (148-153).

**கட்டுரை காதை** : 'கடி பொழில்' - 'இல்சாபம் பட்டனிர்' (138-170).

**வழக்குரைக் காதை** : 'அல்லவை செய்தார்க்கு' - 'தோற்றான் உயிர்' (82-93).

**வஞ்சிக் காண்டம்** : நடுகல் காதை - 'மதுரை மூதூர்' - 'மன்னவர் ஏறு' (218-234)

**வாழ்த்துக் காதை** : 'என்னே இஃது' - 'தோன்றுமால்' (9)

**ஆ) மணிமேகலை: விழா வறைகாதை :** 'தேவரும் மக்களும்' - 'மருங்கு என்' (66-72).

**ஊரலர் உரைத்த காதை** : 'நாவல் ஓங்கிய' - 'உண்டு கொல்'(1-17), 'கற்றுத் துறைபோகிய' – 'தீத்தொழில் படாஅள்' (32-57).

**பாத்திரம் பெற்ற காதை** : 'போதி நீழல்' - 'நல் அறம் கண்டனை' (73-98).

**சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை** :
'வாழி எம்கோ' - 'அரசுஆள் வேந்துஎன்' (129-163).

KAHE

# *அலகு: 3*

# *1. சிலப்பதிகாரம்*

**புகார் நகரச் சிறப்பு**

தெற்கே பொதிகை மலையையும், வடக்கே இமயமலையையும் எல்லையாக உடைய நிலப்பரப்பு, மிகவும் அகன்றது. அப்பெருநிலப்பகுதியில் அமைந்த நகரங்கள் பலவும் சான்றோர்கள் வாழ்கின்ற சிறப்பை உடையன. அந்நகரங்களுக்குள், பண்பாட்டுச் சிறப்பினால், தனித்தன்மையுடன் என்றும் நின்றுநிலைத்துள்ள தனிச்சிறப்பினை உடையது, புகார் நகரம். அந்நகரத்தில் வாழ்கின்ற மக்கள், வேறு எந்த நகரத்தையும் விரும்பமாட்டார்கள். அவ்வாறு, புகார் நகரமானது, வானுலகத்தைப் போலவும், நாகர் உலகத்தைப் போலவும் மிகுந்த சிறப்புடையது.

**கண்ணகியின் சிறப்பு**

புகார் நகரத்தில், மழைமேகத்தைப் போலப் பயன்கருதாமல் பிறருக்கு உதவுகின்ற வள்ளல்தன்மை கொண்ட வணிகனாக, மாநாய்கன் என்பவன் வாழ்ந்துவந்தான். அவனது, குலக்கொம்பாகத் தோன்றியவள், கண்ணகி. அவள், பன்னிரெண்டு வயதுடையவள். அழகில், வல்லிக்கொடி போலச் சிறந்தவள். செந்தாமரை மலரில் உள்ள திருமகளைப்போல, உடலும் உள்ளமும் பொலிவுடையவள். அருந்ததியைப் போன்று, கற்பில் சிறந்தவள். மக்கள் அனைவராலும் விரும்பிப் போற்றப்படுகின்ற நற்குணங்கள் பலவும் கொண்டவள்.

**கோவலனின் சிறப்பு**

சோழநாட்டு மன்னனாலும் சிறப்பாகப் போற்றப்பட்ட உயர்க்குடி மக்களாக வாழ்ந்தவர்கள், வணிகர் குலத்தார். அவர்களது குலச்சிறப்பினை மேலும் உயர்த்துகின்றவகையில், அருள்செல்வமும், பொருள்செல்வமும் நிறைந்து வாழ்ந்தவன், மாசாத்துவனாகிய வணிகன். அவன், நல்லவழியில் பொருளைச் சேர்த்து, பயன்கருதாமல் பிறருக்கு அவற்றைக் கொடுத்து உதவி மகிழ்பவன். சங்கநிதி மற்றும் பதுமநிதி ஆகிய இருவகைச் செல்வங்களையும் ஏழைகளுக்குக் கொடுக்கின்ற வள்ளலாக வாழ்பவன். அவனுடைய மகன், பதினாறு வயதுடைய கோவலன். இதுநாள் வரையிலும், இப்பூமியில் வாழ்ந்தவர்கள் பெற்ற புகழைக் காட்டிலும், பல மடங்கு சிறந்த புகழை உடையவன். அனைவரையும் கவர்கின்ற முருகனாகிய அழகன். பேசிமுடியாத பெரும்புகழுடைய பெரியவன். பெண்கள் அனைவரும் காதல் கொள்கின்ற பெருங்குணங்கள் கொண்டவன், கோவலன்.

**கோவலன்-கண்ணகி திருமணம்:**

கோவலன்-கண்ணகி ஆகியோரின் திருமணத்துக்கென்று பெரியோர் நிச்சயித்த உரோகிணி நட்சத்திரத்து நன்னாள் வந்தது. முத்துப்பந்தலின் மேற்கூரையானது, நீலப்பட்டினால் அழகு செய்யப்பெற்றிருந்தது. அழகிய அப்பந்தலின் கீழே, கோவலன் – கண்ணகியின் திருமணம் இனிதே நடைபெற்றது. அறிவிலும், நற்செயலிலும் அனுபவம்பெற்ற அந்தணன், வேதநெறிப்படி திருமணச் சடங்குகளைச் செய்வித்தான். அருந்ததி விண்மீனைப் போன்ற சிறப்புடைய கண்ணகியின் கையைப் பிடித்தபடி மணமேடையில், கோவலன் தீயை வலம்வந்தான். 'அரிய இக்காட்சியைக் காண நாம் சிறந்த தவத்தைச் செய்துள்ளோம்' என்று கண்டவர்கள் வியந்தனர்.

**அன்பில் சிறந்திருந்தனர்**

சிறப்பில் ஒத்த இணையராகிய கோவலனும், கண்ணகியும் மிக மகிழ்ச்சியாக இல்லறத்தை மேற்கொண்டனர். கோவலனின் தாயானவள், தனது மருமகளாகிய கண்ணகியின் சிறந்த பண்புகள்

பலவற்றையும் கண்டு மகிழ்ந்தாள். சுற்றத்தவரை அரவணைத்தல், அறவோரைப் பாதுகாத்தல், விருந்தினரை உபசரித்தல் முதலான பண்புகளில் கண்ணகி சிறந்திருப்பதனைக் கண்டு உள்ளம் குளிர்ந்தாள். செல்வத்துடன் கூடிய அவர்களது மனையறம் மேலும் சிறக்கவேண்டி, அவர்களைத் தனிக்குடித்தனம் வைக்க விரும்பினாள். அவர்களுக்குப் பணிசெய்வதற்குத் தேவையான வேலையாள்களுடன் தனிவீட்டில் குடியமர்த்தினாள். அங்கு, கணவனும் மனைவியும், கருத்து ஒன்றிய அன்பால் இணைந்து, இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தனர். அவர்கள் அன்புவாழ்க்கையில் சிறந்திருந்த சில ஆண்டுகளும் கழிந்தன.

**மாதவியுடன் கோவலன்**

இவ்வாறு, கண்ணகியுடன், கோவலன் இனிது வாழ்ந்துவந்த நாளில், புகார்நகரில், முத்தமிழிலும் சிறந்தவளாகிய மாதவி ஆடிய பதினொரு கூத்தையும், பாடலையும், ஆடலையும் கண்டு மகிழ்ந்தான். அத்துடன், அவளை உரிமையாக்கிக் கொள்கின்ற மாலையையும் கோவலன் வாங்கினான். அவளது கலைத் திறமையால் ஈர்க்கப்பட்ட கோவலன், தனது வீட்டை மறந்தவனாக, மாதவியை மட்டுமே நாடினான்.

**மதுரையில், மனம் வருந்திய கோவலன்**

மாதவியுடன் வாழ்ந்ததன் பயனாக, கோவலன் மணிமேகலையைப் பெற்றெடுத்தான். வினைவசத்தால், கோவலன் பெருஞ்செல்வத்தைத் தொலைத்து, சோழநாட்டின் புகாரிலிருந்து, பாண்டிய நாட்டின் மதுரையை அடைந்தான். அங்கு, புறஞ்சேரியில் மாதரியின் ஆதரவில், ஆயர்ப்பாடியில் தங்கியிருந்த நாளில், தனது முந்தைய செய்கைகளை நினைத்துக் கவலைகொண்டான். கண்ணகியை மறந்து, மாதவியை நாடிச்சென்ற தனது குற்றத்தை எண்ணி மனம் வருந்தினான். அக்குற்ற உணர்வுடன் கண்ணகியிடம் பின்வருமாறு வருந்திப் புலம்பினான்.

'நான் சான்றோர்கள் பழிக்கின்ற வகையில், நல்லொழுக்கத்தை மறந்தேன்; பெற்றோருக்கு நல்லமகனாக இருந்து செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறினேன்; வயது குறைவாயினும், நுண்ணறிவில் சிறந்தவளாகிய உனக்கும் தீமை செய்தேன். 'எனது செயல்கள், பழிப்புக்கு உரியவை' என்பதைச் சிந்திக்கவும் இல்லை. இவ்வாறு, பெருந்தவறு செய்த நான் உனக்குச் செய்த நன்மை என்பதும் இல்லை. மானத்தையும், செல்வத்தையும் தொலைத்த கீழானவனாக நான் மாறிவிட்டேன். இருந்தபோதிலும் என்னை நீ சிறிதும் வெறுக்கவில்லை. 'என்னுடன் புறப்பட்டு மதுரைக்கு வா!' என்று நான் கூறியதற்கும் மறுப்பு கூறவில்லை. எனது வார்த்தையைக் கேட்டஅளவில், நம்பிக்கையுடன் உடனடியாகப் புறப்பட்டு வந்துவிட்டாயே கண்ணகி!' என்று வருந்திப் புலம்பினான்.

**கோவலனிடம் கண்ணகி பேசியவை:**

உள்ளம் கலங்கிப் புலம்பிய கோவலனிடம் கண்ணகி பின்வருமாறு பேசினாள். 'ஐயனே! நீங்கள் என்னைப் பிரிந்திருந்த நாளில் குடும்பத்தலைவியாக இருந்து நான் செய்யவேண்டிய நற்செயல்கள் பலவற்றையும் செய்ய இயலவில்லை. அறவோர்க்குக் கொடை தருதல், துறவிகளுக்குத் தொண்டுசெய்தல், சான்றோர்கள் போற்றுகின்றவகையில் விருந்தினர்களைப் பாதுகாத்தல் முதலான நல்லறங்கள், நம்மைப் போன்ற குடும்பத்தாருக்குரிய அடிப்படையான சமுதாயக் கடமைகள். நீங்கள் உடன் இருக்கும்போது மட்டுமே மேற்கண்ட நன்மைகளை என்னால் செய்திருக்க இயலும். நீங்கள் என்னைப் பிரிந்திருந்ததால் உயர்ந்த அந்நன்மைகளை என்னால் செய்ய இயலவில்லை. சிறந்த அச்சேவைகளைச் செய்ய இயலாமல் நான் வருந்திய நாள்கள் பல உண்டு. அந்நாள்களில், நாம் குடும்பம் நடத்துகின்ற பாங்கினை கண்டு மகிழலாம் என்று, உமது பெற்றோரும் நமது வீட்டுக்கு

வருவர். ஆனால், அங்கு நீங்கள் இல்லாதநிலையில் அவர்களும் சொல்லமுடியாத துன்பத்தை அடைந்தனர்.

அவர்கள், எனது பொறுமையைப் பாராட்டி, அன்புடன் எனக்கு ஆறுதல் கூறுவர். அந்நிலைகளில், எனது பெருந்துன்பத்தை உள்ளத்தில் மறைத்தபடி, உதட்டளவில் நான் வெளிப்படுத்திய பொய்ச்சிரிப்பால் அவர்கள் மேலும் உள்ளம் கலங்கினர். அவ்வாறு நான் மாட்டுமில்லாமல், மரியாதைக்குரிய உங்கள் பெற்றோரும் உள்ளம் வருந்தும்படியாக, கீழான செயல் செய்தீர்கள். நானோ, உங்களது உள்ளக்கருத்துக்கு வேறுபாடில்லாதவகையில், விதிப்படி எனது வாழ்க்கையை மேற்கொண்டிருந்தேன்' என்றாள்.

**வழக்குரை காதை: அரசவையில் மன்னன்நிலையும், கண்ணகியின் கோலமும்**

பாண்டிய மன்னன், இறந்த உடனேயே பாண்டிமாதேவியும் இறந்துபோனாள். இதனை அறியாத கண்ணகி, தீராத ஆத்திரத்துடன் அரசவையில் நின்று பேசினாள். 'பாவச்செயல்களைச் செய்தவர்களுக்கு அறமே எமனாகும்' என்ற சான்றோர் அவையின் உண்மையான வார்த்தைகள், ஒருநாளும் பொய்யாவதில்லை. வெற்றிவேந்தனாக இருந்தும், தீவினையால், நீதியில் தோற்ற பாண்டிய மன்னனின் மனைவியே!, 'நான் இனியும் செய்யவுள்ள செயல்களையும் கேட்பாயாக!' என்று கண்ணகி, அரசவையில் கோபத்துடன் பேசினாள்.

கருங்குவளை மலர்போன்று மைதீட்டி அழகு செய்யப்படுகின்ற கண்ணகியின் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது. காடுபோல, அடர்ந்த கருமையான கூந்தல், தலைவிரிகோலமாகி, அமங்கலமாக இருந்தது. அவள் கையில் ஏந்தியிருந்த ஒற்றைத் தனிச்சிலம்பினால் நான்மாடக்கூடலாகிய மதுரை நகரத்து மன்னனான பாண்டியனின் உயிரும் பிரிந்து, அவன் வெற்று உடம்பானான்.

மேனியில் புழுதியும், தலைவிரிகோலமாகிய கூந்தலும், ஒற்றைத் தனிச் சிலம்பும், ஆறெனப் பெருகிய கண்ணீரும் கண்ணகியின் அடையாளங்களாயின. அவற்றைக் கண்ட உடனேயே, பாண்டிய மன்னன் வழக்கில் தோற்றான். தன் கணவன் கள்வன் இல்லை' என்பதனை மனஉறுதியுடன் உலகுக்கு எடுத்துரைக்கின்ற வகையில், பாண்டிய மன்னனின் முன்னிலையில் அவள் வழக்காடிய சொற்கள், மன்னனின் செவிவழியே சென்று அவன் நல்லறிவை விளங்கச்செய்தன. மன்னனும் நீதி தவறிய தனது நிலைக்கு வெட்கப்பட்டு, அந்த நொடிப்பொழுதிலேயே உயிர்விட்டான்.

**கட்டுரை காதை: கண்ணகிக்கு, மதுராபுரி தெய்வம் கூறியவை:**

பாண்டிய மன்னனின் தீவினை, அவனது குலத்துக்கும், மதுரைக்கும் பெரும்பழியைத் தருகின்ற காலம் வந்தது. பாண்டிமாதேவியின் முத்துச்சிலம்பு பொற்கொல்லனால் திருடப்பட்டிருந்தது. கண்ணகியின் மாணிக்கச் சிலம்பை விற்பதற்கு வந்த கோவலன், சிலம்பைத்திருடியதாகப் பொற்கொல்லன் பொய் கூறினான். சிலம்பு காணாமல்போன செய்தியைப் பாண்டிய மன்னனிடத்தில் தெரிவிக்கப் பொற்கொல்லன் மன்னனிடத்தில் வந்தான். அவ்வேளையில், மன்னன் அரசியின் ஊடலைத் தீர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தான். அவன் பேசிய வார்த்தைகள் கோவலனின் உயிரைக் கொல்கின்றவகையில் விதி விளையாடியது. 'நீங்கள் கூறுகின்றபடி, அரசமாதேவியின் சிலம்பை அவன் திருடியிருந்தால், சிலம்புடன் அவனைக் கொண்டு வருக' என்று அவன் கூறிய வார்த்தை, 'அவனைக் கொன்று, அச்சிலம்பை இங்கு கொண்டுவருக!' என்று பொருள்படும்படியாக வெளிப்பட்டது.

மதுரையைத் தீக்கு இரையாக்கிய கோபத்துடன் நின்ற கண்ணகியிடத்தில், மதுரையின் காவல் தெய்வமாகிய மதுராபதித் தெய்வம் பேசியது. ஆடிமாதத்துத் தேய்பிறை அட்டமியும், கார்த்திகை நாளும் கூடிய வெள்ளிக்கிழமை அன்று, புகழ்வாய்ந்த மதுரைநகருடன், பாண்டியமன்னனுக்கும் பெருங்கேடு விளையும்' என்றமைந்த பழமையான சோதிடச் சொல் உண்டு.

**கோவலனின் முற்பிறப்பு வரலாறு:**

'கண்ணகி!, முற்பிறப்பில் உனது கணவன், சிங்கபுரத்து மன்னனாகிய வசு என்பவனுக்கு அரசுப்பணியாளனாக இருந்தான். அப்பிறப்பில், அவன் பெயர், 'பரதன்' என்பதாகும். அந்நாளில், கபிலபுரத்திலிருந்து வந்த, 'சங்கமன்' என்கின்ற வணிகன், சிங்கபுரத்தில் தனது விலைமதிப்புடைய நகைகளை விற்றுப் பெருஞ்செல்வத்தைச் சம்பாதித்தான். சங்கமன் மீது வெறுப்புகொண்ட பரதன், அவனை, 'பகைநாட்டு ஒற்றன்' என்று பொய் கூறி, வசுமன்னன் முன்னால் நிறுத்தினான். செய்யாத குற்றத்துக்குத் தண்டனையாக, சங்கமனும் கொல்லப்பட்டான். கொல்லப்பட்ட சங்கமனின் மனைவியாகி நீலி, ஆறாத துன்பத்துடன் அழுது துடித்தாள். 'மன்னனே! செய்யாத குற்றத்துக்காக எனது கணவனைக் கொன்றது நீதியோ?; வணிகர்களே! இதுமுறையோ?; மக்களே!, இதுதான் உங்களது மன்னனின் நீதியோ?' என்று அழுது புலம்பியபடி, மன்றங்களிலும், தெருக்களிலும் முறையிட்டுத் திரிந்தாள். பதினான்கு நாட்கள் கடந்தபின்னர், 'கணவனைத் தொழுவதற்கு உரிய நாள் இது' என்ற ஏக்கத்துடன், வானுயர்ந்த மலையின் உச்சியிலிருந்து விழுந்து உயிர்விட்டு, வானுலகத்தில் இருக்கின்ற கணவனை அடையத் துணிந்தாள். எங்களுக்கு இத்தகைய தீராததுன்பத்தைச் செய்தவர்கள் யாராயினும், நாங்கள் அடைந்த துன்பத்தை அடைவது உறுதி' என்று வன்மொழியாகிய சாபமும் இட்டாள். அத்தீவினையே இப்பிறப்பில் கோவலனை அடைந்து, செய்யாத குற்றத்துக்காக உயிர்விட நேர்ந்துள்ளது' என்று கண்ணகியிடம் கூறியது.

**வஞ்சிக்காண்டம்-நடுகல் காதை**

கண்ணகியின் கோபம், நீதியை நிலைநாட்ட எழுந்தது. 'நல்லோரின் கோபம், தீமையை அழிக்கும்' என்பதை உணர்த்துவதாகவே, கண்ணகி மதுரையை எரித்தாள். அங்கு நல்லவர்கள் காப்பாற்றப்பட்டனர். தீயவர்கள் மட்டுமே அழிக்கப்பட்டு, மதுரையில் நன்மை நிலைநாட்டப்பட்டது. கண்ணகி மதுரையிலிருந்து, மலைநாடாகிய சேரநாட்டை அடைந்தாள். அங்கு, தங்கம்போல ஒளிவீசுகின்ற வேங்கைமர நிழலில் கண்ணீருடன் நின்றாள். அந்த இடத்திலேயே கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் எடுத்தான். வேள்விகள் செய்கின்ற அந்தணர்கள், சோதிடர்கள் மற்றும் நல்லாசிரியர் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெற்றான். சிற்பவிதிகளை முறையாக உணர்ந்து, சிற்பக்கலையில் சிறந்திருந்த சிற்பிகளைக்கொண்டு, வானவர்களும் விரும்புகின்றவகையில், 'பத்தினிக்கோயில்' அமைக்கப்பட்டது.

வானவர்கள் வாழ்கின்ற இமயமலையின் தெய்வம் வணங்கப்பட்டது. அம்மலையின் உச்சியிலிருந்து, வடநாட்டு மன்னர்களாகிய கனகவிசயர்களைக் கல் சுமக்கச்செய்து கண்ணகியின் தெய்வத் திருவுருவம் கோயிலில் சிறப்பாக நிறுவப்பட்டது. கண்ணகியின் தெய்வப்படிமமானது, கைத்திறன் மிக்க பொற்கொல்லர்கள் செய்த அணிகலன்களால் மேலும் அழகுசெய்யப்பட்டது. கோயில் வாயிலில், காவல் தெய்வங்களும் முறையாக நிறுவப்பட்டன. நாள் பூசைகளும், விழாக்களும் தவறாமல் நடப்பதற்குச் சேரன்செங்குட்டுவன் ஆணையிட்டு மகிழ்ந்தான். சேரன் உள்ளிட்ட

மூவேந்தரும், கண்ணகியை மலர்தூவி வழிபட்டு மகிழ்ந்த அப்பொழுதில், கண்ணகி வானில் காட்சி தந்தாள்.

**சேரன் கண்ட திருக்காட்சி**

காண்பதற்கு அரியதாகிய கண்ணகியின் திருக்காட்சியை வானில் கண்டஅளவில், சேரன் செங்குட்டுவன் பெரும்வியப்பில் ஆழ்ந்தான். 'என்ன ஓர் அரிய காட்சி!' என்று வியப்பில் பூரித்தான். சிலம்பும், மேகலையும், வளையலும், பொன் வயிரத்தோடும், இன்னும் பிற அணிகலன்களும் அழகுசெய்ய, மின்னல் கொடி போல வானில் கண்ணகி திருக்காட்சி தந்தாள்.

## 2. மணிமேகலை – சீத்தலைச்சாத்தனார்

**விழாவறை காதை:** (விழா-இந்திர விழா, அறைதல்-அறிவித்தல், இந்திரவிழாவைப் பற்றிய அறிவிப்பு என்றமைந்த பகுதி.) சோழநாட்டின் பூம்புகார் நகரம், மிகவும் பழமையானது. காவிரிப்பூம்பட்டினம் என்பதும் அதன் பெயராகும். அங்கு, தீமை நீங்கி, நன்மை நிலைகொள்வதற்கு, இருபத்துஎட்டு நாள்கள் இந்திரவிழா நடைபெறுவது வழக்கம். அவ்விழாவினைக் காண, வானவரும் அந்நகருக்கு வருவர் என்பது சிறப்பு. முரசு கொட்டி, இந்திரவிழாவை அறிவிக்க, நான்கு வகையான படைகளுடன் வள்ளுவன் வந்தான். 'விழா தொடங்கவுள்ளது; சிறப்புடைய இந்நாள்களில், எங்கும் நன்மை நிலவும்படியாக, நகரத்தை அழகு செய்யுங்கள்!; நிறைவான வழிபாடுகளைச் செய்யுங்கள்!; பட்டிமன்றங்களால் நல்லதைச் சிந்தியுங்கள்!' என்று முரசினை அறைந்து வள்ளுவன், இந்திரவிழா பற்றிய செய்தியைப் பட்டினப்பாக்கமாகிய நகரத்தில் அறிவித்தான்.

**ஊர் அலர் உரைத்த காதை: (அலர்-பழிச்சொல், ஊரார்கள், மாதவி மற்றும் மணிமேகலையைப் பற்றி பழித்துப் பேசியது)** இந்திர விழா நடைபெறுகின்ற நாளும் வந்தது. அந்த விழாவில், மாதவி, தன் மகளாகிய மணிமேகலையுடன் நடனமாடுவதாக இருந்தது. ஆனால், அவர்கள் இருவரும் அவ்விழாவில் கலந்துகொள்ளவில்லை. அதை அறிந்த மாதவியின் தாயாகிய சித்திராபதி மிகவும் கவலை கொண்டாள். மாதவியின் தோழியாகிய வயந்தமாலையை அழைத்தாள். 'நீ சென்று, ஊரார் பலவாறு பழித்துப் பேசுகின்ற செய்தியினை, மாதவியிடம் தெரிவித்து, அவளை உடனே அழைத்து வருக!' என்று அனுப்பிவைத்தாள்.

**வயந்தமாலையின் துன்பம்**

மாதவியின் துறவுநிலையால், வயந்தமாலையும் மிகவும் வருத்தம்கொண்டிருந்தாள். மாதவி இருந்த மண்டபத்தை அடைந்து, வருத்தத்துடன் அவளிடன் பேசினாள். 'மாதவி! இவ்வூரில் உள்ளோர் உன்னுடன் பகை ஏதும் கொண்டதில்லை. ஆனாலும், இன்று பலரும் பலவாறு உன்னைப் பழித்துப் பேசும்படியாக உனது செயல் இருக்கிறது; கலைகள் பலவற்றிலும் சிறந்தவளாகிய நீ, இன்று தவக்கோலம் கொண்டவளாக, துறவியாக இருப்பது பொருத்தமானதன்று' என்பதே ஊராரின் கருத்து' என்று வயந்தமாலை மாதவியிடம் கூறினாள்.

**உயிர் வாழ்வதால் வெட்கப்படுகிறேன்**

வயந்தமாலை கூறியதைக் கேட்ட மாதவி, மிகுந்த வருத்தத்துடன் பேசத் தொடங்கினாள். தோழியே! எனது ஆருயிர்க் கணவராகிய கோவலனின் இறப்பினைக் கேட்டு, நானும் அவர் உடனேயே இறந்திருக்கவேண்டும். அதைச் செய்யாமல், இன்னும் உயிர்வாழ்கின்ற நிலையே எனக்கு மிகவும் வெட்கம் தருவதாக இருக்கிறது. ஊரார் என்னைப் பழித்துப் பேசுகின்ற நிலையைக்காட்டிலும், கோவலன் இல்லாமல் வாழ்கின்ற நிலையே எனது துன்பத்தை அதிகரிக்கிறது. அதனால், ஊராரின் பொருளில்லாத பழிச்சொற்களும் எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

**மூன்றுவகையான பெண்கள்**

கடல் சூழ்ந்த இவ்வுலகில் வாழ்கின்ற மன உறுதியுடைய பெண்களில் மூன்று வகையினர் உண்டு. கணவன் இறந்த செய்தியைக் கேட்டஉடனேயே, அத்துன்பத்தைத் தாங்கமுடியாமல், ஊதுலைக் குருகைப்போலப் பெருமூச்சுவிட்டு, உள்ளத்திலிருந்து, எழுகின்ற உண்மைஅன்பை அடக்க இயலாமல், தாமும் கணவருடனேயே இறந்தே போகிறவர்கள் உண்டு. கணவனைப் பிரிந்து வாழமுடியாத மற்றும் சிலர், கொடிய தீமூட்டி, குளிர்ந்த பொய்கையில் பாய்பவர்களைப்போல, மனவுறுதியுடன் தீயில் விழுந்து உயிர் இழப்பார்கள். மேலும் சிலர், கணவரை இழந்து வாழ்கின்ற நாள்களிலும், மிகவும் கொடுமையான விரதங்களைக் கடைப்பிடித்து, கைம்மைக் கொடுமையை இனைமையானதாக மேற்கொள்வார்கள். மறுபிறப்பிலும் அவரையே கணவராக அடைவது அவர்களின் நோக்கமாகும்.

**தனி மாண்பில் நிலைத்த கண்ணகி**

கண்ணகி, மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வகைப் பெண்களைக் காட்டிலும் மேம்பட்டவள். அவள், மதுரையில் கோவலனுக்கு ஏற்பட்ட வீண்பழியைக் கேட்டவுடன், தலைவிரி கோலத்துடன், பெருகிய கண்ணீர் உடலை நனைக்கும்படியாக, மிகுந்த துன்பத்துடன் மதுரையை அடைந்தாள்; தனது இடது மார்பகத்தைத் திருகி எறிந்து, மதுரையின் தீயிட்டுக் கொளுத்தினாள். அந்நகரத்தின் தீமையை முற்றிலும் நீக்கினாள்; நீதியை நிலைநாட்டினாள். செய்வதற்கு அரிதாகிய இதைச் செய்த கண்ணகி, மாபெரும் மனவுறுதியாகிய சிறப்புடையவள். எந்தப்பெண்ணுக்கும் வாய்க்காத அவளுடைய மன உறுதியை இளங்கோவடிகள், ‘தெய்வக்கற்பு’ என்று போற்றுகிறார்.

**கண்ணகி மகள் மணிமேகலை**

‘உயர்ந்த தெய்வக்கற்புடைய கண்ணகியின் மகளாகிய மணிமேகலை, தவவாழ்வை மேற்கொள்கின்ற துறவை மட்டுமே மேற்கொள்வாள்; கணிகையாகிய தனக்குப் பிறந்தவள் என்பதால், கீழானவாழ்வை ஒருபொழுதும் மணிமேகலை மேற்கொள்ள மாட்டாள்’ என்று மாதவி, வயந்தமாலையிடம் கூறினாள்.

**பாத்திரம் பெற்ற காதை: பசியின் கொடுமை**

தீவதிலகை அறிவுறுத்தியபடி, மணிமேகலை, கோமுகிப் பொய்கையை வலம் வந்து, அட்சயபாத்திரத்தைப் பெற்றாள். அங்கு, தீவதிலகை கூறுகின்ற அறவுரையைக் கேட்டபடி நின்றிருந்தாள். யாருக்கும் எளிதில் கிடைக்காத அட்சயபாத்திரத்தைக் கொண்டு, மணிமேகலை

செய்யவேண்டிய நல்லறம் குறித்தும், அச்சேவையின் உயர்வு குறித்தும் மணிமேகலைக்கு தீவதிலகை அறிவுறுத்தினாள்.

தீவதிலகை போதிமரத்தின் நிழலிலே காட்சியளிக்கும் புத்த பெருமானுடைய திருவடிகளைப் பிறவிப்பிணி தீரும் பொருட்டு வாழ்த்தி வணங்கினாள். பின்னர், மணிமேகலைக்கு அறவுரை கூறினாள். மக்களுக்கு வருகின்ற பசிப்பிணி என்று கூறப்படுகின்ற பாவியானது, உயர்ந்த குடியிற் பிறந்தவர்களுக்கு இயல்பாகவே அமைகின்ற உயர்ந்த பண்புகளை அழித்துவிடும். சிறப்புடைய உள்ளத்தின் அழகையும், உடலின் அழகையும் அழித்துவிடும். தாம் மணந்துகொண்ட வாழ்க்கையைத் துணைவியோடு, தன்மான்மில்லாமல் பிறரது வீட்டுவாசலில் நின்று பிச்சை ஏற்கச்செய்யும். கொடியதாகிய இப்பசிப்பிணியைத் தீர்ப்பவருடைய புகழானது, எவ்வளவு பேசினாலும் தீராதது.

**விசுவாமித்திரனின் துன்பம்**

வாழ வழியில்லாத, சாதாரண மக்கள் மட்டுமில்லாமல், நாடாளுகின்ற மன்னனும்கூட, கொடிய பசித்துன்பத்தால் அடைகின்ற துன்பத்தை, விசுவாமித்திரனின் வரலாற்றால் தீவதிலகை மணிமேகலைக்கு எடுத்துக்கூறினாள்.

ஒரு காலத்தில், விசுவாமித்திரன் நாளாளுகின்ற மன்னனாக இருந்தான். அவனது நாட்டில் திடீரென மழைவளம் இல்லாமல் போனது. பசும்புல்லும் மரங்களும் எரிந்து புகையும்படி பஞ்சம் வந்து மழையின்றி மக்கள் வாடினர். மழை வளத்தால், மக்களுக்கு நல்லாட்சியைப் பெற்றுத் தருவேன் என்கின்ற உறுதியுடன், விசுவாமித்திரன், காட்டிலே அலைந்து திரிந்தான். காயும் கனியும் இலையும் கிழங்குமாகிய உணவுகளில் எதுவும் கிடைக்கப்பெறாமல் தவித்தான். ‘இறந்த நாயினது மாமிசத்தை தின்றே இனி உயிர்வாழ முடியும்’ என்ற நிலையிலும் மழைவேண்டி, இந்திரனை வணங்குவதிலிருந்து தவறாமல் மனவுறுதியுடன் வழிபட்டான். அவனது வழிபாட்டுக்கு மகிழ்ந்து, அவன் முன்பு தோன்றிய இந்திரனும், முனிவனது கொடிய பசியைப் போக்கினான். அத்துடன், முனிவனது அறச்செயல் கண்டு மகிழ்ந்த இந்திரன், நிலவுலகில் மழைவளம் பெருகும்படிச் செய்தான். விளை பொருளும் பெருகியது. மன்னுயிர்கள், பசி நீங்கி நன்மை பெற்றன’ என்று பசியின் கொடுமையைத் தீவதிலகை மணிமேகலையிடம் கூறினாள்.

பசியைப் பொறுத்துக்கொள்கின்ற வலிமையுடையவருக்கும், தம் பசியைத் தாமே போக்கிக்கொள்வதற்கு வசதி உடையவருக்கும், உணவு தருவது, சேவையாகாது. அது, அறத்தை விலை பேசுகின்ற கீழான செயலாகும். பசியால் வாடுகின்ற ஏழைகளுக்கு உணவு தருகின்ற வாழ்க்கையே, வாய்மையுடன் கூடிய அறவாழ்க்கை ஆகும். எனவே, ‘உண்மை அன்புடன் அத்தகைய உயர்ந்த வாழ்க்கையை வாழ்பவர்கள், ‘உணவோடு உயிரையும் கொடுப்பவர்கள்’ என்ற சிறப்பினைப் பெறுவர். இத்தகைய பேரறம் செய்வதற்குக் கருவியாகிய அமுதசுரபியைப் பெற்ற நீ, குறைவில்லாமல் இது தருகின்ற உணவைக்கொண்டு, பசிநோயால் சிறிது சிறிதாக உயிரிழந்து துன்பப்படுகின்ற மக்களின் உயிரைக் காப்பாற்றுக!’ என்ற அருளறத்தை எடுத்துரைத்தாள்.

**சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை: மாவண்கிள்ளியிடம், காவலன் உரைத்தவை: மன்னவனுக்கு வாழ்த்தும் வணக்கமும்**

தங்கத்தால் தளமிடப்பட்ட மண்டபத்திலே தேவேந்திரன் போன்ற சிறப்புடைய சோழ மன்னன் சென்று அமர்ந்தான். மண்டபத்திற்கு வந்த சிறைக்கோட்டக் காவலர் தம் வரவினை வாயில் காவலருக்கு அறிவித்து, அரசனுடைய கட்டளையைப் பெற்று மன்னனைக் காண வந்தனர். அவனைப் பணிவுடன் வணங்கினர். 'மன்னவனே! இனிது வாழ்க!!' என்று வாழ்த்தினர். 'தங்களிடத்தில் கூறுவதற்காக வந்த செய்தியினைக் கேட்டருள்க!' என்று மன்னனிடத்தில் சிறைக்கோட்டத்து அதிகாரி பணிவுடன் கூறினார். மன்னவனும் அதற்குச் சம்மதித்து அவர்கள் கூறுவதைக் கேட்டான்.

**அதிசய பாத்திரம்:**

பெண்ணொருத்தி, யானைத் தீ என்கின்ற தீராத பசிநோய்க்கு ஆட்பட்டு, இப்பெரியநகரத்தின் தெருக்களில் பிச்சை எடுத்து உயிர்வாழ்ந்து வந்தாள். இந்நகருக்குப் புதியவளாகிய அவள், பலநாளும் பசித்துன்பத்துக்கு ஆற்றாமல் உடம்பு வாடித் துன்புற்றவள். அத்தகையவள், அனைவரும் வியக்கும்படியாக, சிறந்த காவலை உடைய நமது சிறைக் கோட்டத்தினுள்ளே புகுந்து, பெரிய புகழையுடைய உமது திருப்பெயரைக் கூறி வாழ்த்தினாள். அங்கிருந்த குற்றவாளிகள் அனைவருக்கும் நல்லறங்களை எடுத்துரைத்தாள். அத்துடன், தன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தைக்கொண்டு, அனைவருக்கும் வேண்டுமளவு உணவு வழங்கி பசி தீர்த்தாள்' என்ற செய்தியைக் கூறி, மன்னனையும் வாழ்த்தினான்.

**அரசவைக்கு மணிமேகலையின் வருகை:**

அவ்வற்புதம் கேட்டு வியப்புற்ற அரசனும், 'அத்தகைய சிறப்புடைய பெண்ணுக்கு நம்மால் இயன்றவகையில் உதவுதல் வேண்டும்!' என்னும் ஆர்வத்துடன், அப்பெண்ணை இங்கு அழைத்து வருக! என்று வாயில் காப்பாளர்களுக்குக் கட்டளையிட்டான். அரசனுடைய வரவேற்பை அறிவித்த வாயில் காப்பாளர்களோடு, காயசண்டிகையின் உருவத்திலிருந்த மணிமேகலை, அரசன் முன் சென்று நின்றாள். அவளைக் கண்ட மன்னனும், 'வருக! வருக!' என்று அவளை மகிழ்வுடன் வரவேற்றான். அழகிய வீரக்கழல் கட்டிய திருவடியையுடைய அரசர் பெருமானுடைய அருள் நெடிது வாழ்க! என்று வாழ்த்தினாள். அது கேட்டு மகிழ்ந்த அம் மன்னவன், 'சிறந்த தவ ஒழுக்கத்தையுடைய பெண்ணே! நீ யார்?; உன் கையிலேந்திய தெய்வத்தன்மையுடைய இத்திருவோடு, எவ்விதம் உனக்குக் கிடைத்தது? என்று வினவினான்.

**மணிமேகலை, மன்னனுக்கு உரைத்தவை:**

அது கேட்ட மணிமேகலை, இது உலகவறவியின் பக்கத்திலே ஒரு தெய்வத்தால் வழங்கப்பட்டது. தெய்வத்தன்மையுடையது. ஆனைத்தீ நோய் என்னும் கொடிய நோய் காரணமாகத் தோன்றிய, தீராதபெரும் பசியையும் இது தீர்த்திருக்கின்றது. பசிப்பிணியாலே உடலும் உடைந்து, உள்ளமும் வருந்தி ஆற்றாத மக்களுக்கு இப்பாத்திரம் பசியாகிய கொடிய நோயைத் தீர்க்கும். குறையாத இதன் உணவு, உடம்பில் உயிரை நிலைக்கச்செய்கின்ற அரிய மருந்தாகும்" என்று கூறினாள்.

**மன்னனிடம் மணிமேகலையின் விண்ணப்பம்:**

அது கேட்ட அரசன் மணிமேகலையை நோக்கி "நல்ல அறத்தைச் செய்கின்ற உனக்கு நான் செய்யத் தகுந்த உதவி என்ன?" என்று கேட்டான். "அரசே நீ எனக்குச் செய்யும் உதவியும் ஒன்று உள்ளது. அதாவது, சிறையிடப்பட்டோர் இருக்கின்ற சிறைச்சாலையை அகற்றி, அவ்விடத்தைத் துறவறத்தோர் இருக்கும் தவப்பள்ளியாக அமைக்கவேண்டும். அதுவே, நான் தங்களிடம் வேண்டுவது'' என்று மன்னனிடத்தில் கூறினாள். வேந்தர் பெருமான் நீடூழி வாழ்க! என்று சொல்லி வாழ்த்தினாள். செங்கோன்மை பிறழாது அரசாட்சி செலுத்தும் அக்கிள்ளிவளவனும் இளங்கொடி கூறியபடிச் செய்வேன் என்று உடன்பட்டு; அருமையான துன்பத்தைத் தருகின்ற சிறையில் தண்டனை பெற்றிருந்தோரை எல்லாம் தப்புதற்கரிய அச்சிறைக் கோட்டத்தினின்றும் விடுதலை செய்து, பெரிய தவத்தையுடைய அறவோரைப் பேணும், அற முதலிய பெருமையுடைய உறுதிப் பொருளை எய்த விரும்பிய துறவோர் வாழும் அறக்கோட்டமாக மாற்றினான்.

பார்வை வினாக்கள்

***சிறு வினாக்கள்: (2 மதிப்பெண்கள்)***

1. இந்திரவிழாவின் சிறப்பையும் மாதவி வயந்தமாலைக்கு உரைத்தவற்றையும் விளக்குக.
2. கோவலன் கண்ணகி பெருநலன்களைக் குறிப்பிடுக.
3. மணிமேகலை குறிப்பிடும் பசியின் கொடுமையை விவரி

***பெருவினாக்கள்: (6 மதிப்பெண்கள்)***

1. மதுரைக் காண்டம் சுட்டும் கோலனின் முற்பிறப்பு வரலாற்றையும், கண்ணகியின் பண்பு நலன்களையும் விரித்துரைக்க.

2. மணிமேகலை, சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய சிறப்பினை விவரி.

3. சிலப்பதிகாரம் கூறும் கொலைக்களக்காதை செய்தியை விளக்கியுரைக்க.

4. மணிமேகலை குறிப்பிடும் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாறிய செய்தியை குறிப்பிடுக.

1. மாபெரும் பத்தினியின் மகள் யார்?.

(அ). கண்ணகி (ஆ). மாதவி (இ). ஆதிரை (ஈ). மணிமேகலை

2. கோட்டம் என்பது எதைக் குறிக்கும்?

(அ). கோயில் (ஆ). வீடு (இ). நாடு (ஈ). தெரு

3. காப்பியத்தின் உட்பிரிவுகள் …………………

(அ) காதை (ஆ) காண்டம் (இ) இயல் (ஈ) பிரிவு

4.“மணிமேகலை” காப்பியத்தின் ஆசிரியர் யார்?

(அ) இளங்கோவடிகள் (ஆ) சேக்கிழார் (இ) சீத்தலைச் சாத்தனார் (ஈ) திருகள்ளுவர்

5. கண்ணகிக்கு கடவுள் மங்கலம் செய்க என ஏவிய மன்னன்

(அ). செங்குட்டுவன் (ஆ). நெடுஞ்செழியன் (இ). சேரலாதன் (ஈ). பெருவளத்தான்

6. கடிஞை என்பதன் பொருள்?

(அ).பாத்திரம் (ஆ). வண்டி (இ). கடிகாரம் (ஈ). கணையாழி

7. உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே யார் கூற்று?

(அ). காயசண்டிகை (ஆ). தீவதிலகை (இ).மணிமேகலா (ஈ). சம்பாபதி

8. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர்------

(அ) இளங்கோவடிகள் (ஆ) சீத்தலைச்சாத்தனார் (இ) கபிலர் (ஈ) பாணர்

9. கண்ணகியின் தந்தை யார்?

(அ) மாசாத்துவன் (ஆ) மாநாய்க்கன் (இ) சங்கமன் (ஈ) பரதன்

10. ‘ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்று குறிப்பிடப்படும் காப்பியம்--------

(அ). சிலப்பதிகாரம் (ஆ). மணிமேகலை (இ) வளையாபதி (ஈ) குண்டலகேசி

11. தீதிலா வடமீனின் திறமுடையவள் எனப் போற்றப்பட்டவள்…யார்?

(அ). நீலி (ஆ). மாதவி (இ). கண்ணகி (ஈ). மணிமேகலை

12. போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யார் கூற்று?

அ) மாதவி ஆ) வயந்தமாலை இ) கண்ணகி ஈ) சித்ராபதி

13. மணிமேகலை காப்பியதில் உள்ள காதைகள் எத்தணை?.

அ) 30 ஆ) 3 இ) 20 ஈ) 25

14. கண்ணகி இறுதியாக சென்றடைந்த நாடு எது?

அ) சோழநாடு ஆ) பாண்டியநாடு இ) சேரநாடு ஈ) கொங்குநாடு

15.மாதவியின் தோழி யார்?

அ) தேவந்தி ஆ) சித்ராபதி இ) வசந்தமாலை ஈ) தீவதிலகை

## UNIT-IV

## SYLLABUS

**அலகு – IV : சிறுகதைகள் :** 1. மகாமசானம், 2. அப்பாவின் வேஷ்டி 3. அந்நியர்கள், 4. இந்நாட்டு மன்னர்கள்

| | | |
|---|---|---|
| 1. மகாமசானம் | – | புதுமைப்பித்தன் |
| 2. அப்பாவின் வேஷ்டி | – | பிரபஞ்சன் |
| 3. அந்நியர்கள் | – | ஆர். சூடாமணி |
| 4. இந்நாட்டுமன்னர் | – | நாஞ்சில்நாடன் |

KAHE

## 1. மகாமசானம்

**மானுட வாழ்வில் மனிதநேயம்**

வாழ்க்கை என்பது தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுப்பது அடுத்தவரிடமிருந்து எதையும் எடுப்பது அன்று”என்றார் பிரெஞ்சுப் படைப்பாளி விக்டர் யூகோ, ஆனால் இரக்கமில்லாத உறவுகளால் கைவிடப்பட்ட ஏழைகளின் வாழ்க்கையை இந்த உலகத்தில் யாரும் கண்டு கொள்வதே இல்லை என்பதே கசப்பான உண்மை.

‘நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பரமர்க்கு அங்கு ஆகுமே’

என்பது திருமந்திரம்.

படங்களும் ஓவியங்களும் நிறைந்த மாடங்களை உடைய கோயிலின் இருக்கும் இறைவனுக்கு நாம் ஒரு பொருளைக் காணிக்கையாகத் தந்தால், அதுநடமாடும் கடவுள்களான ஏழைகளைப் போய்ச்சேராது.

ஆனால், நடமாடும் ஏழைகளுக்கு நாம் ஒன்று கொடுத்தால், அது படமாகும் கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நிச்சயம் போய்ச்சேரும், என்பதே அதன்கருத்து.

**இன்றைய உலகில் மனிதநேயம்**

இந்த இயந்திர உலகத்தில் பசிப்பிணியைப் பற்றியும், பட்டினியால் அவதியுறும் கடைக்கோடி மனிதர்களைப் பற்றியும் சிந்திப்பதற்கு யாரும் இல்லை.

சகமனிதன்படும் துன்பத்தை கண்டு இரங்கும் மனிதனைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். இப்படி ஒரு அவலநிலை, மனிதர்கள் தம்மையொத்த மனிதர்களிடத்தில் மனிதநேயத்தோடு நடந்து கொள்ளாமல் இதைத்தான் பாரதி சொன்னான்.

‘சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல்கண்டும்
சிந்தையிரங்காரடி கிளியே – செம்மை மறந்தாரடி’

**மகாமசானம் சிறுகதையில் மனிதநேயம்**

ஒருபரப்பரப்பான வாழ்க்கையை நகரின் மத்தியப்பகுதியில் போக்குவரத்து மிகுந்த ஷன நெருக்கடியான இடத்தில், நலிவுற்ற மனிதர்களின் வாழ்க்கை எப்படியிருந்து என்று படம்பிடித்துக் காட்டுகிறார் புதுமைப்பித்தன்.

.....அப்போது அவன் ரஸ்தாவின் ஓரத்தில் உள்ள நடைபாதையில் படுத்துச் சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான். சாவதற்கு நல்ல இடம் (சாவதற்குக் கூட நல்ல இடம்)சுகமான மரநிழல் வெக்கை தணிந்து அஸ்தமனமாகி வரும் "ஷேஷே" என்ற ஷன இயக்கம். ராஷ கோலாகலம் என்று தான் சொல்ல வேண்டும்

அப்போது அவன் செத்துக் கொண்டிருந்தான். சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான். ஷனங்கள் அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாது சிலர் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. அந்தக் கிழட்டு துலுக்கப்பிச்சைக்காரன் தாடி மிகவும் நரைத்துவிட்டது. மேலே அழுக்குப் பிடித்த கந்தை, கையையும் காலையும் மூப்பு போஸனமின்மை (தொடர்ந்துபட்டினி) இரண்டும் சேர்ந்து சூம்ப வைத்துவிட்டன. கால்காய்ந்து போனதால். வறுமை எப்படி இருக்கும் பிச்சைக்காரனின் தோற்றம் எப்படி இருக்கும் என்பதை காட்சிப்படுத்துகிறார் .

ஒருமனிதனின் வாழ்கை எப்படியெல்லாம் இருக்கிறது என்று காட்சிப்படுத்துகிறார். புதுமைப்பித்தன் இந்தப்பரபரப்பான உலகத்தில் செத்துக்கொண்டிருக்கும் ஒருவனை கவனிக்க நேரமில்லாமல் ஷனங்கள் ஓடிக்கொண்டேயிருக்கிறார்கள்.

'மகாமசானம்' என்றும் இந்தச்சிறுகதை புதுமைப்பித்தனின் படைப்புகளில் அவலச்சுவையை கட்ட அழகுபட நேர்த்தியாக, படிக்கிறவன் கதைக்குள் மூழ்கிக் கண்ணீர் வடிக்கவைக்கும் ஒருபண்பட்ட படைப்புஎன்று சொல்லவேண்டும்.

'புதுமைப்பித்தன் பார்த்திருக்கிறார் அந்ததப் பிச்சைக்காரன் சாவதை. குழந்தையை எதையும் கவனிக்காமல் ஓடிக்கொண்டியிருக்கும் மனிதர்களை காலகாலமாக சகமனிதனை மதிக்காத நேசிக்காத மனிதநேயம்மற்ற வாழ்க்கையை, இந்த யாதார்த்தத்தைப் பதிவுசெய்து அறுபது ஆண்டுகளுக்கு பிறகும் கூட நம்மை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டும் கதைக்களம் அவருக்கு மட்டும் எப்படிசாத்தயமானது.

புதுமைப்பித்தன் படைப்புகளைப் பற்றி பேசும் ரா.ஸ்ரீ.தேசிகன்."ஒரு கவியுள்ளம் சோகத்தினால் சாம்பிய கவியுள்ளோம் வாழ்க்கை முட்களில் விழுந்து இரத்தம் கக்குகிற உள்ளம் கதைகள் மூலம்பேசுகிறது" என்று குறிப்பிடுகிறார்.(புதுமைப்பித்தன் படைப்புகள்).

கலைஞன் இறந்து பட்டாலும் அவன் படைப்புகள் வாழ்ந்துகொண்டே இருக்கின்றன. என்பது மறுக்க முடியாத உண்மை. புதுமைப்பித்தனின் சிறுகதைத்

தலைப்பிலேயே ஒருபுரட்சி ஏற்படுத்தியிருக்கிறார். ஆனந்தவிகடன் சித்தரஅகராதி மாசனம் என்பதற்கு மயானம், சுடலை என்று பொருள் தருகிறது. அப்படி என்றால்' மகாசானம், என்பதற்கு மிகப்பெரிய சுடுகாடுஎன்று அர்த்தமா? யாருக்குத் தெரியும். புண்ணித் தலமாக வணங்கப்படவேண்டிய ஒருமாநகரம், மனிதத்துவம் இல்லாத மனிதர்களின் ஈவுஇரக்கமற்ற குணத்தினால் இப்படி மயானமாகிப் போய்விட்டது. என்று உருவகப்படுத்தி இருப்பார் என்று எடுத்துக்கொள்ளலாமா? எழுதுவதில் புதுமை எழுத்தில் புரட்சி என்று முத்திரை படைத்ததனால் தானே புதுமைப்பித்தன் என்று அழைக்கப்பட்டாரோ. புதுமைப்பித்தன், ஒவ்வொருவரும் உச்சிமுகர்ந்து பாரட்டப்பட வேண்டிய உன்னதக் கலைஞன்.

## 2. அப்பாவின் வேஷ்டி

**பிரபஞ்சன் கதைகளில் தந்தை - மகன் உறவு**

பிரபஞ்சன் காட்டும் தந்தை மகன் உறவு ஓர் ஆழமான பாச உறவாக அமைந்துள்ளது. இவ்வுறவு குறித்ததாக அமைந்திருக்கும் எல்லாக் கதைகளிலும் தந்தையைப் பற்றி உயர்வாகவே கூறப்பட்டுள்ளன. எந்தச் சூழ்நிலையிலும் மகனைப் பற்றித் தவறான எண்ணம் கொண்ட தந்தையர்கள் கதைகளில் காட்டப் பெறவில்லை. மகன் மீது அளவுகடந்த பாசம் உடையவர்களாகவும், அவர்களை எந்தச் சூழ்நிலையிலும் ஊக்கப்படுத்துபவர்களாகவும் வருகின்றனர். அதேபோல பல கதைகளிலும் மகன் தந்தைமேல் அளவுகடந்த அன்புள்ளம் கொண்டவனாக இருந்தாலும், சில கதைகளில் தந்தையை ஒதுக்கி வைத்திருக்கும் தன்மையோடும் இருக்கிறான். தந்தை என்னும் பாத்திரத்தை எல்லாக் கதைகளிலும் உயர்வாகப் படைத்ததற்குக் காரணம், தன் தந்தைமேல் கொண்ட மதிப்பும், மரியாதையும் தான் என்று பிரபஞ்சன் கூறியுள்ளார். அவருடைய அப்பா நல்ல நண்பராக நண்பர்களிடத்தில் மட்டுமல்ல தன்னிடத்திலும் அவ்வாறு நடந்து கொண்ட விதத்தினால் தான், இவ்வாறு அவரை எழுதத் தூண்டியது என்று கூறுகின்றார். இதனை அவருடைய சிறுகதைகள் தொகுப்பின் முன்னுரையில், என் அப்பாதான் எனக்கு ஆதர்சம். மிகவும் மேன்மையான மனிதர் அவர். இத்தகைய தன்மையினால் தான், அவர் தன்னுடைய கதைகளில் வரும் தந்தைக் கதாபாத்திரங்களை,

தோழமை உறவுகொண்ட பாத்திரங்களாகச் சித்திரித்துள்ளார் எனலாம். விழுது, அப்பாவின் வேஷ்டி, அடி, தியாகி, அந்த மனிதர், தந்தையும் மகனும் போன்ற சிறுகதைகள் தந்தைக்கும் மகனுக்குமுள்ள உறவினைப் பற்றி அமைந்துள்ளன.

**அப்பாவின் வேஷ்டி சிறுகதையில் தந்தை மகன் உறவு**

இவற்றுள் அப்பாவின் வேஷ்டி என்னும் சிறுகதை அப்பாவின் மீது கொண்ட பாசத்தின் காரணமாக அவருடைய வேஷ்டியை நினைவாக வைத்திருக்கும் மகனின் செயலைக் கூறுவதாக அமைந்துள்ளது. அவருடைய அப்பா இறந்தாலும், அவருடைய நினைவுகளோடு வாழும் மகனைச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அப்பா வேஷ்டியைக் கட்டிகொண்டு வெளியே வருவார். அடடா... நெருப்பைச் சுற்றிக்கொண்டு வருவதுபோல் அல்லவா இருக்கும். அந்த வேஷ்டியில் தான் அப்பா எவ்வளவு அழகாகத் தெரிந்தார். அவரால் அந்த வேஷ்டிக்கு மகிமையா, அல்லது அந்த வேஷ்டியாலா? அப்பாவை அப்போது கட்டிக்கொள்ள வேண்டும் போல் இருக்கும். கட்டிக் கொள்வேன். பச்சைக் கற்பூரத்தின் வாசனையோடு, அந்தப் பட்டு சில்லென்று குளிர்ச்சியாய், பாப்பாவின் கன்னம்போல மிருதுவாய் இருக்கும். அதைத் தடவித் தடவிச் சந்தோஷம் கொள்வேன், என்பதிலிருந்து தந்தை மீது கொண்ட மகனின் பாச உணர்வை விளங்கிக் கொள்ள முடிகிறது.

**அப்பாவின் வேஷ்டியின் அழகு**

குழந்தைகளாகிய எங்களுக்கு அவருடைய சிவப்புப் பட்டு வேஷ்டியே அற்புதமானதாகத் தோன்றியது.சிவப்பென்றால் சுத்தச் சிவப்பும் இல்லை. குங்கும வண்ணமும் இல்லை. செப்புப் பாத்திரத்தைப் புளிபோட்டு விளக்கிப் படிக் கல்லில் வைத்து விட்டுக் குளிப்பார்களே. அப்போது பார்த்திருக்கிறீர்களா? நீங்கள்! உதயகாலத்துச் சூரிய ரேகைகள் பட்டுத் தகதகக்குமே, அந்தச் செப்புப் பாத்திரம் - அது மாதிரியான வேஷ்டி அது.முழுதும் செப்புக் கலரும் இல்லை. கரை பச்சை நிறம். நாலுவிரல் அகலம். கரையில் சரிகை வேலைப்பாடுகள். சரிகை வேலைப்பாடு என்ன என்கிறீர்கள்? வாத்துகள் ஒன்றன்பின் ஒன்றாய் அணிவகுத்துச் செல்கிற சித்திரம். அவை வாத்துகள் அல்ல; அன்னப்பறவைகள் என்றாள், அம்மா. நாங்கள் அன்னப்பறவைகளை

நிறத்தில் பார்த்ததில்லை. அந்த வேஷ்டியின் கரையில்தான் பார்த்திருக்கிறோம். எதுவானால்தான் என்ன? உயிருள்ள ஜீவராசிகள்.

**அப்பா வேஷ்டியை பராமரிக்கும் விதம்**

அந்த வேஷ்டியை அப்பா துவைத்து நான் இரண்டு முறை பார்த்திருக்கிறேன். குழந்தைப் பாப்பாவைக் குளிப்பாட்டுவது மாதிரி இருக்குமே! அதற்குச் சுடு தண்ணீர் ஆகாது. பச்சைத் தண்ணீரில் தான் அதைக் குளிப்பாட்டுவார். சவுக்காரம் அதற்கு ஆகாதாம். ஆகவே சந்தன சோப்பைத்தான் அப்பா உபயோகிப்பார். அப்பா குளித்தது மைசூர் சந்தன சோப்பில். அதற்கும் முந்தி கதம்ப சோப்பில். பிரான்சில் இருந்து வந்த கதம் சோப். நாங்கள் கதம்ப சோப் என்போம். இறக்குமதி நின்று போனவுடன் மைசூர்ச் சந்தன சோப். அதைத்தான் இதற்கும் போடுவார். சோப் போடுவது தடவிக் கொடுப்பது மாதிரி இருக்கும். அம்மா எங்களுக்கு எண்ணெய் தேய்த்து விடுகிற முரட்டுத் தனம் இருக்காது. அவ்வளவு மெது. கசக்கிப் பிழிய மாட்டார். மெதுவாக நீரில், அகலவாக்கில் வேஷ்டியின் முனைகளைப் பிடித்துக்கொண்டு அலசுவார். பிறகு, தண்ணீர்த் துளி எங்கள் மேல் தெறிக்க, உதறுவார். ரொம்பவும் உதறக்கூடாது. நாள்பட்ட துணி, கிழித்துவிடக் கூடும். உதறும்போது. மழைச் சாரலில் நிற்பதுபோல் இருக்கும், எங்களுக்கு. அப்புறம் நிழலில் காயப்போடுவார். வெயில் பட்டால் நிறம் வெளுக்கக்கூடும். காய்ந்ததும் அப்பாவுக்குச் சொல்ல வேண்டியது எங்கள் பொறுப்பு. நாங்கள் மாற்றி மாற்றி அஞ்சு நிமிஷத்துக்கு ஒரு முறை துணியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டே இருப்போம். காய்ந்து விட்டதா என்று பார்ப்பதற்காகத்தான். எங்களுக்கு இது ஒரு சாக்கு. அந்தச் சாக்கில் வேஷ்டியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே இருக்கலாமே! சாயங்காலம் வாக்கில் வேஷ்டி காய்ந்து விட்டிருக்கும். அப்பாவிடம் சொல்ல ஓடுவோம். அப்பாவே வந்து, நிதானமாக அதைக் கொடியில் இருந்து எடுத்து, மூலை பிசிறில்லாமல் இழுத்து மடித்து, மீண்டும் அந்தப் பெட்டிக்குள் வைத்துவிடுவார். இனி அதன் உபயோகம் அடுத்த நல்ல நாளில்தான்.

**அப்பாவின் வேஷ்டி சிறுகதையின் மையப் பொருள்**

அப்பாவின் கரைவைத்த சரிகை வேலைப்பாடுகள் அமைந்த வேஷ்டியே இக்கதையின் மையப்பொருளாகும். அப்பாவின் வேஷ்டியை கட்டிப்பார்க்கத் துடிக்கும்

மகனின் ஆர்வமும் ஏக்கமும் இக்கதையில் வெளிப்படுகின்றது. மகனின் மன உணர்வுகளை கீழ் கண்ட வரிகள் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இதைச் சொல்ல வெட்கம் என்ன? எனக்குப் பெரியவன் ஆனதும் அப்பாவின் வேஷ்டியைக் கட்டிக் கொள்ளவேண்டும்! இதுவே என் லட்சியமாக இருந்தது. நான் பெரியவன் ஆக ஆசைப்பட்டது இதற்காகத்தான். பெரியவன் ஆனால் அப்பாவைப் போல மீசை முளைக்குமே! மார்பில் சுருள் சுருளாக முடி முளைக்குமே.. முக்கியமான விசேஷ நாட்களில், அந்தச் சிவப்புப் பட்டு வேஷ்டியைக் கட்டிக்கொண்டு நான் சாமி கும்பிடுவேனே… நான் பெரியவன் ஆக வேண்டுமே!மடித்தே வைக்கப்பட்டுக் கிடந்ததால், அந்த வேஷ்டி எப்போதும் மடிப்புக் குலையாமல் இருக்கும். மடிப்புகள் பிரிக்க முடியாதனவாக இருக்கும். கடைசி வரை அன்னங்கள் முழுமையாகவே இருந்தன. சரிகைக்கரை இற்று விழவில்லை. நெசவு நேர்த்தி அப்படி. அது அந்தக் காலத்துக் கை வேலைத் திறன். அவசர வாகன யுகம் தோன்று முன்பே தோன்றிய ஒரு நெசவுக் கலைஞனின் கை நேர்த்தி அப்படி உருவாகி இருந்தது. ‘இதை எங்கு வாங்கியது?’ என்று அப்பாவிடம் கேட்டு வைத்துக் கொள்ளவில்லை நான். காவிரிக்கரையில், சோற்றுக்குப் பஞ்சம் இல்லாத, வெற்றிலை பாக்குப் போட்டு சிவந்த வாயுடன், உடம்பில் இளஞ்சூடு பரவிய திருப்தியில் ஒரு மனிதன் தன் மனைவியோடு சேர்ந்து நெய்த வேஷ்டியாக இது இருக்க வேண்டும். மாயவரம், கூரைநாடு, திருபுவனம் என்று ஏதாவது ஒன்றாய் இருக்கக் கூடும். பிறப்பிடம், மூலம் எதானால் என்ன? பிறந்த பயனை? கர்மாவைக் குறைவற, பரிபூரணமாகச் செய்தது அது என்பது சத்தியம் என்று கூறும் மகனின் எண்ண உணர்வுகளை மிக எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

பார்வை நூல்கள்

*சிறு வினாக்கள்:* *(2 மதிப்பெண்கள்)*

1. பிரபஞ்சன் சிறுகுறிப்பு வரைக.
2. அந்நியர்கள் சிறுகதையின் கதைக்கருவினை சுருக்கியுரைக்க.

*பெருவினாக்கள்:* *(6 மதிப்பெண்கள்)*

1. 'மகாமசானம்' சிறுகதை சுட்டும் நகரச் சூழலின் அவலம் குறித்து விரித்துரைக்க.
2. இன்றைய நடப்பியலை 'இந்நாட்டு மன்னர் ' சிறுகதை எடுத்தரைக்கும் விதம் குறித்து விரித்தெழுதுக.
3. மகாமசானம் சிறுகதையின் மையக்கருத்தை விவரி.
4. அந்நியர்கள் சிறுகதையின் மையக்கருத்தை விவரி

KAHE

1. மகாமசானம் என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

(அ). புதுமைப்பித்தன் (ஆ). அம்பை (இ). பிரபஞ்சன் (ஈ). ஜெயகாந்தன்

2. அந்நியர்கள் சிறுகதையின் ஆசிரியர் யார்?

(அ). சூடாமணி (ஆ). அம்பை (இ). பிரபஞ்சன் (ஈ). புதுமைப்பித்தன்

3. 'முட்டை' நாடகப் படைப்பு யாருடையது?

(அ). சூடாமணி (ஆ). அம்பை (இ). பிரபஞ்சன் (ஈ). புதுமைப்பித்தன்

4. "நாசக்காரக்கும்பல்" என்னும் சிறுகதையின் எழுத்தாளர் பெயர் என்ன?

(அ) சூடாமணி (ஆ) பிரபஞ்சன் (இ) நாஞ்சில் நாடன் (ஈ) புதுமைப்பித்தன்

5. வானம் வசப்படும் – என்ற புதினத்தின் ஆசிரியர் யார்?

(அ) பிரபஞ்சன் (ஆ) புதுமைப்பித்தன் (இ) நாஞ்சில் நாடன் (ஈ) சூடாமணி

6. காவேரி என்ற சிறுகதை வெளிவந்த ஆண்டு எது?

(அ) 1947 (ஆ) 1948 (இ) 1957 (ஈ) 1958

7. நாஞ்சில் நாடன் எழுதிய முதல் நாவலின் பெயர் என்ன?

(அ) முட்டை (ஆ) காஞ்சனை (இ) வானம் வசப்படும் (ஈ) தலைகீழ் விகிதங்கள்

8. நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி யார்?

(அ). புதுமைப்பித்தன் (ஆ) பிரபஞ்சன் (இ). சூடாமணி (ஈ). அழகிரிசாமி

9. 'பிரபஞ்சன்' எழுதிய சிறுகதையின் பெயர் என்ன?

(அ). மகாமசானம் (ஆ) அப்பாவின் வேஷ்டி (இ). அந்நியர்கள் (ஈ). இந்நாட்டு மன்னர்

10. உளவியல் எழுத்தாளர் என்று புகழப்பட்டவர் யார்?

(அ). அழகிரிசாமி (ஆ) பாரதிதாசன் (இ). கவிமணி (ஈ). சூடாமணி

11. நாஞ்சில் நாடனின் இயற்பெயர் என்ன?

(அ). புதுமைப்பித்தன் (ஆ) பிரபஞ்சன் (இ). முருகேசன் (ஈ). சுப்பிரமணியம்

12. எழுத்தாளர் கு. அழகிரிசாமி அவர்கள், சாகித்திய அகாடமி விருது பெற்ற ஆண்டு எது?

(அ). 1960 (ஆ). 1970 (இ). 1975 (ஈ). 1980

13. வானம்வசப்படும் புதினத்தின் ஆசிரியர்

(அ). புதுமைப்பித்தன் (ஆ). வெங்கடாசலம் (இ). பிரபஞ்சன் (ஈ). இராமசாமி

14. 'நாஞ்சில் நாடனின் இயற்பெயர்------

(அ). இராமசாமி (ஆ). வெங்கடாசலம் (இ). பிரபஞ்சன் (ஈ) க.சுப்பிரமணியம்

15. சிறுகதையில் இடம் பெறுகின்ற "ஓரா "என்ற சொல்லின் பொருள்……?

(அ) ஆமாம் (ஆ). இல்லை (இ) வேறு (ஈ). தவறு

16. புதுமைப்பித்தனின் முதல் படைப்பு எது?

அ) மகாமசானம் ஆ) குலாப்ஜான் காதல் இ) காஞ்சனை ஈ) பொன்னகரம்

17. சுவீடிய மொழியில் யாருடைய படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன?

அ) புதுமைப்பித்தன் ஆ) கி.ராஜநாராயணன் இ) சுஜாதா ஈ) பிரபஞ்சன்

18. அக்கா – தங்கையின் பாசப்பிணைப்பினை வெளிப்படுத்தும் சிறுகதை எது?

அ) அந்நியர்கள் ஆ) இந்நாட்டு மன்னர் இ) அப்பாவின் வேஷ்டி ஈ) மகாமசானம்

19. பின்வரும் நூல்களுள் நாஞ்சில் நாடனின் சாகித்திய அகாதமி விருதுபெற்ற நூல் எது?

அ) வானம்வசப்படும் ஆ) சூடியபூ சூடற்க இ) மனதுக்கு இனியவள் ஈ) தலைகீழ் விகிதங்கள்

20. சக்தி இதழ் மூலம் தமிழ்ச் சிறுதை உலகில் தடம் பதித்த எழுத்தாளர் யார்?

அ) கு.அழகிரிசாமி ஆ) நாஞ்சில் நாடன் இ) பிரபஞ்சன் ஈ) ஆர்.சூடாமணி

## UNIT-V

## SYLLABUS

**மொழிப்பயிற்சி – மொழிப்பயிற்சி:**

### மொழிப்பயிற்சி

1. படைப்பிலக்கியப் பயிற்சிகள்
(கதை, கவிதை,கட்டுரை, உரைநடை எழுதுதல், நேர்காணல்)
2. மொழிபெயர்ப்பு

பார்வை நூல்கள்

1. ‘உயரட்டும் நாடு’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.
2. ‘விடியலைத் தேடி’ என்னும் தலைப்பில் 25 வரிகளுக்கு மிகாமல் ஒரு கவிதை வரைக.
3. ‘வாழ்க்கை வாழ்வதற்கே’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.
4. ‘மரங்கள் மண்ணின் உயிர்’ என்னும் தலைப்பில் ஒரு கவிதை வரைக.

KAHE

KAHE